652

652

KAMALA
TAMIL READER

THIRD BOOK

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
27 FEB 1942
MADRAS

BY

S. RAMAKRISHNA AVADHANI, M.A., L.T.,
National College High School, Trichinopoly.

AND

Vidvan. M. RAJAMANIKKAM, B.O.L.,
Tamil Pandit Muthialpet High School, Madras.

920

V. K. ARUNACHALAM
TEPPAKULAM P. O., TRICHINOPOLY.

Price As. 5

கமலா தமிழ் வாசகம்

மூன்றும் புத்தகம்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
27 FEB 1942
MADRAS

ஆக்கியோர் :
S. இராமகிருஷ்ண அவதானி, M.A., L.T.,
நேஷனல் காலேஜ் ஹைஸ்கூல், திருச்சிராப்பள்ளி.

வித்வான் மா. இராசமாணிக்கம், B. O. L.,
தமிழாசிரியர், முத்தியாலுப்பேட்டை ஹைஸ்கூல், சென்னை.

494.81186
920

V. K. அருணசலம்
தெப்பக்குளம் :: திருச்சிராப்பள்ளி.

பதிப்புரிமை] 1941 [விலை அணு 5.

P31,9

முதற் பதிப்பு 1941

திருந்திய பதிப்பு „

920

முகவுரை

கமலா தமிழ் வாசகம் என்னும் பெயர் கொண்ட இந்நூல் வரிசை, அரசியலார் அண்மையில் 1939-ல் வெளியிட்ட **பாட இயலை** அடிப்படையாகக் கொண்டது. அப்பாட இயலில் காணப்பெறும் **குறிப்புகள் அனைத்தும்** இவ்வரிசை யில் கைக்கொள்ளப்பட்டுள்ளன. சைக்கிள், மோட்டார், பெட்ரோல் போன்ற பல ஆங்கிலச் சொற்கள் பேச்சு மொழியிற் கலந்துவிட்டமையாலும், அவற்றுக்கென்று புதிதாகப் பயன்படுத்தும் தமிழ்ச் சொற்கள் சிறு பிள்ளை கட்கு விளங்குதல் அரிதாதலாலும், வேறு வழியின்றி, அவசியமான ஆங்கிலச் சொற்கள் இடையிடையே பெய் துரைக்கப்பட்டுள்ளன. அபிநயப் பாடல்கள், நாடகங்கள், உரையாடல்கள், கதைப் படங்கள், எளிய முறையிற் கற் பிக்கும் இலக்கணப் பகுதிகள், சிறுவர்க்கேற்ற சிறந்த கட்டுரைப் பகுதிகள், மௌனவாசிப்புக்கு உரிய பாடங் கள் முதலியன இவ்வரிசையிற் சிறப்பிடம் பெற்றுள்ளன. இந்நூல் வரிசை மாணவர் உலகில் சிறப்புறும் என்று நம்புகிறோம்.

S. இராமகிருஷ்ண அவதானி

மா. இராசமாணிக்கம்

பொருளடக்கம்

எண்	விஷயம்	பக்கம்
1.	படம் பார்த்து விஷயம் சொல் ...	1
2.	படம் பார்த்து விஷயம் சொல் ...	2
3.	புத்த மஹான் ...	3
4.	பிரார்த்தனை ...	6
5.	வாழை மரம் ...	8
6.	சுத்தமான காற்றும் சூரிய ஒளியும் ...	11
7,	கிளியும் பூனையும் ...	13
8.	உண்மையுள்ள வேலையாள் ...	15
9.	நான்கு எருதுகள் கதைப்படம் ...	18
10.	வைத்திய சாலை ...	20
11.	முயல்வேன் ...	23
12.	கொசுக்களும் ஜ்வரமும் ...	24
13.	அரசனுக்கும் நியாயம் உண்டு ...	27
14.	காடுகள் ...	30
15.	உண்மையுள்ள இடைச் சிறுவன் ...	33
16.	மோகனன் ...	35
17.	சுகாதார விதிகள் ...	37
18.	கலியுக பீமன் காமா ...	39
19.	காக்கையும் நரியும் ...	42
20.	கடவுள் கவனிக்கிறார் ...	44
21.	கமலமும் அம்மை குத்துதலும் ...	47
22.	காட்சிகள் ...	50
23.	வெண்ணிலா ...	51

எண்	விஷயம்	பக்கம்
24.	இரண்டு உழவர்	... 52
25.	வெண்காயப் பயிர்	... 55
26.	கண் நோய்	... 59
27.	கோழிக்குஞ்சு செய்த தவறு	... 62
28.	நாய் கற்பித்த பாடம்	... 65
29.	கமலம் செய்த காரியம்—I	... 67
30.	கமலம் செய்த காரியம்—II	... 70
31.	கடிதங்கள்	... 72
32.	நீதி மன்றம்	... 73
33.	பொறுமைக் குணம்	... 77
34.	சாரணச் சிறுவன்	... 80
35.	ஆகாய விமானங்கள்	... 83
36.	அறிவற்ற ஆமை	... 86
37.	நமது நாட்டு அரசாட்சி—I	... 90
38.	நமது நாட்டு அரசாட்சி—II	... 93
39.	தெய்வத்தின்மீது பழியா !	... 95

செய்யுட் பகுதி

I.	இடைச் சிறுவன்	... 99
II.	ஆத்திசூடி	... 101
III.	கொன்றை வேந்தன்	... 102

கமலா தமிழ் வாசகம்

1. படம் பார்த்து விஷயம் சொல்



2. படம் பார்த்து விஷயம்சொல்.



3. புத்த மஹான்

உள்ளவர்	போக்க	இளவரசு	துறந்தார்
தனிமை	பிரியம்	ஓரளவு	இருப்பின்
உபதேசித்தார்	வடிந்தது	ஐயோ	தவிக்கின்றதே.

1. தம்பீ, இந்தப் படத்தில் உள்ளவர் யார் தெரியுமா? இவர் புத்த மஹான் என்பவர். இவர் எல்லா உயிர்களிடத்தும் அன்புடையவர். ஓர் உயிரும் துன்பப்படுவதைக் காண இவர் பொறுதவர்.

2. இவர் ஓர் அரச குமாரர். இவர், உலகத்து உயிர்களின் துன்பத்தைப் போக்க விரும்பினர்; அதனுல், தம் இளவரசுப் பட்டத்தைத் துறந்தார்; காட்டுக்குச் சென்ருர்; அங்குத் தனிமையாய் இருந்து யோசித்தார். மனிதர் உயிர்களிடம் பிரியமாய் இருப்

பின், உலகத் துன்பம் ஓரளவு நீங்கும் என்பதை இவர் உணர்ந்தார் ; ‘எல்லோரும் ஒருவருக்கொருவர் அன்புடையவராய் நடந்துகொள்ள வேண்டும் ; உயிர்களிடம் அன்பு காட்டவேண்டும்,’ என்று மக்களுக்கு உபதேசித்தார்.

3. ஒரு நாள் இவர் தனியே ஒரு வழியில் போய்க்கொண்டு இருந்தார். அப்போது இடையன் ஒருவன் ஆடுகளை ஓட்டிக்கொண்டு இவர் எதிரில் வந்தான். அந்த ஆடுகளில் சிறிய ஆட்டுக் குட்டி ஒன்று இருந்தது. அது நடக்க முடியாமல் நொண்டி நொண்டி வந்தது.

4. அதைப் புத்தர் பார்த்தார். இவர் கண்களிலிருந்து நீர் வடிந்தது. “ஐயோ ! இந்த ஆட்டுக் குட்டி நடக்க முடியாமல் தவிக்கின்றதே ! இந்த இடையன் இதைத் தூக்கிவரக்கூடாதா ? போகட்டும் ; நானே இதை எடுத்துக்கொண்டு ஆடுகளோடு செல்வேன்,” என்று கூறி, அந்தச் சிறிய ஆட்டுக்குட்டியை எடுத்து அணைத்துக்கொண்டு நடந்தார்.

5. குழந்தாய், இம்மகானைப் போல நீயும் உயிர்களிடத்து அன்புடன் இருக்க வேண்டும். நாயின் மீதும் கழுதையின் மீதும் கல்லை எறியாதே ; வாயில்லாத பிராணிகளுக்குக் கெடுதி செய்யாதே.

கேள்விகள்

1. புத்தரிடம் காணப்பட்ட சிறந்த குணங்கள் எவை?
2. அவர் மக்களுக்கு உபதேசித்தது என்ன?
3. அவர் எதைத் தூக்கிக்கொண்டு நடந்தார்? ஏன்?
4. நீ இப்பாடத்திலிருந்து அறிவது யாது?

பயிற்சி

1. இளவரசு, தனிமை, பிரியம், ஐயோ—இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுது.
2. இப்பாடத்தில் **படம், காடு, மனிதர், ஆடு, இடையன்**—என்பன சில பொருள்களைக் குறிக்கும் சொற்கள் அல்லவா? இவ்வாறு **ஒரு பொருளின் பெயரைக் குறிப்பது பெயர்ச் சொல்** எனப்படும்.

   புத்தர் நல்லவர், பசு ஓடியது, ஆடு நொண்டினது-இவற்றில் உள்ள பெயர்ச்சொற்களை எடுத்து எழுது.
3. கோடிட்ட இடங்களில் தக்க சொற்களை அமைத்துச் சொல்:—

(a) இவர்—நீர் வடிந்தது.

(b) நாயின்—கழுதை—கல்லே—

(c) இவர்—உயிர்களிடத்தும்—

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
27 FEB 1942
MADRAS

4. பிரார்த்தனை

(ஒரு சம்பாஷணை)

பிரார்த்தனை	வைத்தியர்	மனத்துக்கு	கவலை	கடவுள்
அமைதி	அன்று	கூறுகிறபடி	தீரும்படி	நிம்மதி
அடக்கம்	பொறுமை	வளரும்	புகழ்வர்	முழுமனம்.

மங்களம்:—அக்கா, பிரார்த்தனை செய்வது நல்லது என்று எங்கள் உபாத்தியாயர் கூறினார்.

அது உண்மைதானா?

அக்காள்:—ஆம். அவர் கூறியது உண்மையே.

மங்களம்:—அது எப்படி?

அக்காள்:—மங்களம், நமக்கு நோய் வந்தால் நாம் வைத்தியர் உதவியையும் யோசனையையும் நாடு கிறோம் அல்லவா? அது போலவே, நமது மனத்துக்குக் கவலை, துன்பம் இவை வந்தால், கடவுளின் உதவியையும் யோசனையையும் நாம் நாட வேண்டும். அவர் உதவியால்தான் நமது மனம் அமைதி அடையும்.

மங்களம்:—மனத்துக்குக் கவலை ஏற்படும்போதுதானே கடவுளைப் பிரார்த்தனை செய்யவேண்டும்?

அக்காள்:—அது சரியன்று. நமக்கு நோய் வராமல் இருக்க வேண்டுமானால், வைத்தியர் கூறுகிறபடி ஒழுங்காக நடந்துவர வேண்டும். அதுபோல மனக்கவலை ஏற்படாதபடியும், ஏற்பட்டால் தீரும் படியும் இருக்கக் கடவுளை எப்பொழுதும் பிரார்த்தனை செய்தல் சிறந்தது. அவரைத் தினந்

தோறும் பிரார்த்தனை செய்யவேண்டும். செய்தால் மனம் நிம்மதி அடையும்; நம் குற்றங்கள் ஒழியும்; நல்ல எண்ணங்கள் நம் மனத்திலே தோன்றும்; நாம் நல்ல காரியங்களையே செய்வோம். அன்பு, அடக்கம், பொறுமை முதலிய நல்ல குணங்கள் நம்மிடத்திலே வளரும். நம்மை நல்லவர் என்று எல்லோரும் புகழ்வர். நாம் கடவுளின் உண்மைப் பிள்ளைகளாக விளங்குவோம்.

மங்களம்:—அப்படியா! சரி; நான் இன்று முதல் கடவுளை முழு மனத்தோடும் பிரார்த்தனை செய்வேன்.

கேள்விகள்

1. பிரார்த்தனை என்பது யாது?
2. அதை ஏன் செய்யவேண்டும்?
3. இப்பாடத்தில் வைத்தியர் குறிப்பிடப்பட்டிருப்பது ஏன்?
4. நீ இப்பாடத்தில் அறியும் படிப்பினை யாது?

பயிற்சி

1. பிரார்த்தனை, வைத்தியர், கவலை, கடவுள், பொறுமை—இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்துப் படி.
2. அமைதி, நிம்மதி—இவை ஒரே அர்த்தமுடைய சொற்கள். இம்மாதிரியான சொற்கள் இரண்டைச் சொல்.
3. இப்பாடத்தில் உள்ள பெயர்ச்சொற்களை எழுது.
4. துன்பம், அடையும், ஒழியும், புகழ்வர்—இவற்றின் எதிர்ச்சொற்கள் எவை?
5. இதனைச் சம்பாஷணையாக நடித்துக் காட்டு.

5. வாழை மரம்

யாவருக்கும்	வேண்டா	சொல்பவர்	பார்வைக்கு
விதை	முளைக்க	தோன்றும்	வாழைக்கன்று
பெயர்த்து	குருத்து	பட்டை	தண்டு
பயன்படும்	உணவு	பூத்தொடுக்க	குலைதள்ளும்
கவனி	பூவன்	மொந்தன்	ரஸ்தாளி
பேயன்	செவ்வாழை	நமரன்	மிக்க.

1. வாழைப் பழம் என்றால் யாவருக்கும் பிரியம் அதிகம். அதை 'வேண்டாம்' என்று சொல்பவர் இல்லை. வாழை மரம் பார்வைக்கு அழகானது. அது ஒவ்வொரு கிராமத்திலும் காணப்படும். அது பெரிய வீட்டுத் தோட்டங்களில் இருக்கக் காணலாம்.

2. நாம், வாழை மரத்தை விதை போட்டு முளைக்க வைப்பதில்லை. வாழை மரத்தின் அடியில் தோன்றும் வாழைக் கன்றுகளைப் பெயர்த்து நட்டால், அவை குருத்துவிட்டு வளரும். வாழைக்கன்று, வாழை மரத்தடியில் வளர்வதைப் படத்தில் பார்.

3. வாழை மரத்துக்குக் கிளைகள் இல்லை. அதன் இலைகள் நீண்டு விரிந்து இருக்கின்றன. மரத்தின் அடிப்பாகம் பட்டைகள் கொண்டது. அதன் பூ, காய், தண்டு இவை சமையலுக்குப் பயன்படுகின்றன. இலையும் பட்டையும் உணவு படைக்க உபயோகப்படுகின்றன. வாழை நார், பூத்தொடுக்கவும் துணி நெய்யவும் உதவும்.

4. பெரிய வாழை மரம் பத்து மாதங்களில் குலை தள்ளும். இக்குலைக்குத் தாறு என்பது பெயர். இதனைப் படத்தில் பார். ஒரு மரம் ஒரு முறைதான் தாறுவிடும்.





குலையில் உள்ள வாழைக்காய்களைக் கவனி. அவை சீப் புச் சீப்பாய் இருக்கின்றன. குலை நுனியில் பூ தொங்கு கின்றது.

5. வாழையில் பூவன், மொந்தன், பச்சை வாழை, ரஸ்தாளி, பேயன், செவ்வாழை, தேன் வாழை, நெய் வாழை, நமரன் வாழை எனப் பலவகை உண்டு. அவையல்லாமல், மலை வாழை என்றும் ஒருவகை உண்டு. வாழைப் பழம் மிக்க சுவை உள்ளது.

கேள்விகள்

1. வாழை மரம் எப்படி உண்டாகிறது ?
2. வாழை மரத்தின் உறுப்புகள் எவை ?
3. அவற்றால் என்ன பயன் ?
4. வாழையின் வகைகள் எவை ?

பயிற்சி.

1. வேண்டா, முளைக்க, குருத்து, குலை, மிக்க— இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்துச் சொல்.
2. நுனியில் = நுனி + இல், வைப்பதில்லை = வைப்பது + இல்லை.
   இவற்றைப் பிரி :—பார்வைக்கு, வாழையில், அடியில், கன்றுகளை.
3. கோடிட்ட இடங்களில் தக்க சொற்களை அமைத்துப் படி :—

   (1) வாழையின் அடியில் இருப்பது—.
   (2) வாழைமரம்—ஆனது.
   (3) பூ, காய், தண்டு—உதவும்.
4. இப்பாடத்தில் உள்ள பெயர்ச் சொற்களை எழுது.
5. வாழையின் சிறிய மரத்தைக் **கன்று** என்றே சொல்ல வேண்டும். இவ்வாறு ‘கன்று’ என்று வரும் பிற மரங்களின் பெயர்களைச் சொல்.
6. வாழை மரத்தைப் பற்றி 10 வரிகள் எழுது.

---

6. சுத்தமான காற்றும் சூரிய ஒளியும்

காற்ருல்	சுவாசிக்கும்	இராவிடின்	அளவற்ற
வளர்ச்சி	இங்கிலாந்து	நெவின்சன்	சுவாசப்பை
அப்பியாசம்	தூண்டினர்	பெற்ருர்	விளங்குகிறது.

1. சுத்தமான காற்ருல் உண்டாகும் நன்மைகள் பல. நாம் சுவாசிக்கும் காற்று, சுத்தமாய் இராவிடின், பலவித நோய்களால் வருந்த நேரிடும். ஆதலால், நாம் நல்ல காற்று ஓட்டம் உள்ள இடங்களில் இருக்க வேண்டும்.

2. காற்றுக்கு அடுத்தபடியாகக் கவனிக்கத் தக்கது சூரிய ஒளி. அதனுல் நமக்கு அளவற்ற நன்மைகள் உண்டாகின்றன. சூரிய ஒளி படுவதால், நம் உறுப்புகள் பூரண வளர்ச்சி அடைகின்றன.

3. வெளியில் வளரும் செடி ஒன்றை வீட்டுக்குள் வைத்து வளர்த்தால், அது நன்ருய் வளர முடியுமா? முடியாது. அதுபோல நல்ல காற்றும் சூரிய ஒளியும் இல்லாத இடங்களில் நமது வளர்ச்சி மிகவும் குறைந்து விடுகிறது.

4. நமக்கு உண்டாகும் பலவித நோய்களைச் சுத்தமான காற்ருலும் சூரிய ஒளியாலும் போக்கலாம். இங்கிலாந்தில் சி. ஆர். நெவின்சன் என்பவர் ஒருவர் இருக்கிருர். சில வருடங்களுக்கு முன் அவருடைய சுவாசப் பைகளில் கெடுதல் ஏற்பட்டது. அப்போது வைத்தியர் அவரை நல்ல காற்ருேட்டமும் சூரிய

வெளிச்சமும் உள்ள இடத்தில் இருக்கச் செய்தனர்; அங்குச் சில அப்பியாசங்களைச் செய்யத் தூண்டினர்.

5. வைத்தியர் கூறியபடி நெவின்சன் செய்தார்; சிறிது காலத்திற்குள் நோய் நீங்கிச் சுகம்பெற்றார். இதனால், சுத்தமான காற்றும் சூரிய ஒளியும் உடம்புக்கு மிக்க நன்மையைத் தரத்தக்கவை என்பது விளங்குகிறது அல்லவா?

கேள்விகள்

1. ஏன் சுத்தமான காற்று அவசியம்?
2. ஏன் சூரிய ஒளி அவசியமானது?
3. நெவின்சன் யார்? அவரைப் பற்றி இங்குக் குறிப்பிட்டதேன்?
4. நீ இப்பாடத்தால் அறிவது யாது?

பயிற்சி

1. காற்று + ஆல் = காற்றால், நன்று + ஆய் = நன்றாய்—இப்படியே, 'இடங்களில், அப்பியாசங்களை, நோய்களால்'—இவற்றைப்பிரித்துக்காட்டு.
2. காற்றால், வளர்ச்சி, இங்கிலாந்து, அப்பியாசம்—இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்துச் சொல்.
3. இப்பாடத்தின் 4-ஆம் பாராவில் உள்ள பெயர்ச் சொற்களை எடுத்து எழுது.
4. வெளிச்சம், முடியும், நன்மை, சுகம்—எதிர்ப் பதங்கள் கூறு.



7. கிளியும் பூனையும்

1. மேல்மரக் கிளையில் கிளியைப்பார்;
கீழ்மரக் கிளையில் பூனையைப்பார்.

2. பூனை மேற்கிளைக் கோடிற்றே;
கிளியோ கீழே பறந்ததுவே;

3. பூனை கீழ்க்கிளை தாவிற்றே;
கிளியோ மேல்கிளை மேவிற்றே.

4. இப்படி இரண்டும் அலைந்தனவே;
இங்கும் அங்கும் ஓடினவே;

5. கிளி, கிளைவிட்டே பறந்ததுவே,
'கூடு மாயின், பிடி' என்றே.

6. ‘பிடிப்பேன் பார்!’ எனப் பூனையுமே
பாய்ந்தது ; பாவம் ! விழுந்ததுவே.

7. கீழே விழுந்த பூனையினைக்
கிளியும் பார்த்துச் சொன்னதுவே ;

8. ‘சக்தியை அறிந்து சபதம்செய் ;
இன்றேல், இக்கதி அடைவாயே.’

பயிற்சி

1. இப்பாட்டில் உள்ளவிஷயத்தை 6-வரியில்எழுது
2. நீங்கள் இருவர் இதனை நடித்துக் காட்டுக.
3. பாவம், சபதம், சக்தி, கூடுமாயின்—இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்துச் சொல்.

8. உண்மையுள்ள வேலையாள்

எஜமானர்	மனைவி	மெதுவாய்	சுமார்	அதிரும்படி
சிறுத்தைப்புலி	வெகுதூரம்	அவற்றை	அலறினுள்	அறியாது
திடீரென	முடுக்கி	இட்டி	விலாப்புறம்	உரத்த
மற்ருெரு	ஆபத்து	விசுவாசம்	உருகினுர்	விரைவில்
இரை	மேன்மை	நிலைத்திருக்கும்.		

1. முருகன் தன் எஜமானருடனும் அவர் மனைவியுடனும் ஒரு காட்டின் வழியே வந்துகொண்டு இருந்தான். அவர்கள் வந்த வண்டி மெதுவாய்ப் போய்க்கொண்டு இருந்தது. மாலை சுமார் நான்கு மணி இருக்கும். அப்போது அக்காடே அதிரும்படி பெரிய ஓசை ஒன்று கேட்டது. வண்டியில் இருந்த மூவரும் திரும்பிப் பார்த்தனர்.

2. இரண்டு சிறுத்தைப் புலிகள் வெகு தூரத்தில் இருந்து பல பக்கமும் பார்த்துக்கொண்டே வந்து கொண்டிருந்தன. அவற்றைக் கண்ட எஜமானர் மனைவி ‘ஓ’ என்று அலறினுள். முருகன் செய்வது அறியாது விழித்தான்.

3. புலிகள் திடீரென வண்டியைப் பார்த்து விட்டன. உடனே அவை வண்டியை நோக்கி ஓடி வந்தன. முருகன் குதிரையை முடுக்கி, வண்டியை வேகமாக ஓட்டினுன். குதிரை பறந்ததென்றே சொல்ல வேண்டும்.

4. புலிகள் வண்டியை நெருங்கிவிட்டன. அப்போது எஜமானர் தாம் வைத்திருந்த பெரிய ஈட்டி ஒன்றைக் குறி பார்த்து ஒரு புலியின்மீது எறிந்தார். அந்த ஈட்டி குறி தவறுமற் சென்று அப்புலியின் விலாப்புறத்தில் பாய்ந்தது. அப்புலி உரத்த சத்தத்துடன் கீழே விழுந்தது.

5. அதைப் பார்த்த மற்ளுெரு புலிக்குக் கடுங் கோபம் உண்டாயிற்று. அது உடனே வண்டியை நோக்கிப் பாய்ந்து வந்தது. எஜமானரிடம் வேறு ஆயுதம் இல்லை. 'புலியைத் தடுக்க இனி முடியாது. அது நம்மைக் கொன்று விடும்.' என்ருர் எஜமானர்.

6. அப்போது முருகன், 'ஐயா, நீங்கள் வண்டியை வேகமாக ஓட்டிச் செல்லுங்கள். நான் இப் புலியை எதிர்த்து நிற்கிறேன். நாம் மூவர் இறப்பதை விட, நான் ஒருவன் இறப்பது நலம் அன்ருே?' என்று கூறி, எஜமானர் தடுப்பதற்குள் வண்டியில் இருந்து கீழே குதித்தான்; புலிக்கு முன் நின்ருன்.

7. எஜமானர் ஆபத்தை உணர்ந்தார்; முருகனுடைய துணிச்சலையும் எஜமான் விசுவாசத்தையும் நினைந்து உருகினுர்; வண்டியை வேகமாக ஓட்டினுர். அவர் திரும்பிப் பார்த்தபோது, ஆ! முருகன் கீழே கிடந்தான். அவன்மீது புலி நின்றுகொண்டு அவன் கழுத்தைக் கடித்துக்கொண்டு இருந்தது.

8. எஜமானர் விரைவில் ஊர் போய்ச் சேர்ந்தார். எஜமான் விசுவாசமுடைய முருகன் புலிக்கு

இரையாஞன். முருகனைப்போல உண்மை அன்பு உடைய வேலையாட்களே மேன்மை அடைவார்கள். அவர்களுடைய பெயரும் புகழும் உலகம் இருக்கும் வரையில் நிலைத்திருக்கும்.

கேள்விகள்

1. முருகன் யார்?
2. எஜமானர் புலியை எப்படிக் கொன்ருர்?
3. முருகன் செய்த அற்புதச் செயல் யாது?
4. நீ இப்பாடத்தால் அறிவது யாது?

பயிற்சி :

1. மெதுவாய், சுமார், அதிரும்படி, விசுவாசம்—இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்துச் சொல்.
2. இக்கதையை **மௌனமாகப்படி**; பத்து வாக்கியங்களுள் சுருக்கிச் சொல்.
3. முருகனது தியாகத்தை 6 வரிகளில் சொல்.
4. **புலி**—இது ஒன்றன் பெயர்.

   புலிகள்—இது பல புலிகளின் பெயர்.

   ஒன்றன் பெயர் **ஒருமை எண்** எனப்படும்.

   ஒன்றுக்கு மேற்பட்டவற்றின்பெயர் **பன்மை எண்** எனப்படும்.

   இப்பாடத்தில் வந்துள்ள ஒருமை - பன்மைப் பெயர்களை எடுத்து எழுது.
5. 6-ஆம் பாராவில் உள்ள பெயர்ச் சொற்களை எழுது.

(9. நான்கு எருதுகள் கதைப் படம்)



கேள்விகள்

1. சிங்கம் ஏன் ஓடியது?
2. ஓடிய சிங்கம் எல்லா எருதுகளையும் எப்படிக் கொன்றது?
3. நீ இக்கதையால் உணருவது யாது?

பயிற்சி

1. இக்கதையை 10 வாக்கியங்களில் எழுது.
2. இது போல நீ அறிந்த வேறு கதை ஒன்றைச் சொல்.
3. கோடிட்ட இடங்களில் தக்க சொற்களை அமைத்து எழுது:—
   (1) முதலில் எருதுகள்—இருந்தன.
   (2) பிறகு—சண்டை—.
   (3) அதனால் அவை—இரை—.
4. ஒற்றுமை, சண்டை, பலம், பகை—இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்துச் சொல்.
5. இக்கதையைச் **சிங்கம் கூறுவதைப் போலச்** சொல்.
6. இக்கதையைக் **கடைசி எருது கூறுவது போலச்** சொல்.



10. வைத்திய சாலை

காணப்படுவது	வைத்தியசாலை	நோயாளிகள்	தாதி
கவனிப்பது	மருந்து	ரோட்டி	வைக்கப்பட்டு
அட்டை	தொங்கவிட	உட்கொள்ளும்	குணம்
அடைவான்	இத்தகைய	தாதிமார்	சுவரில்
விரைவில்			

1. படத்தில் காணப்படுவது வைத்தியசாலையில் உள்ள ஓர் அறை ஆகும். இந்த அறையில் மூன்று நோயாளிகள் மூன்று கட்டில்களில் படுத்துக்கொண்டு இருக்கிறார்கள். ஒவ்வொரு நோயாளியையும் ஒவ்வொரு தாதி கவனிப்பதைப் பார். அவள் நோயாளிக்கு மருந்தும் உணவும் கொடுப்பவள். பெரிய வைத்திய சாலைகளில் இத்தகைய தாதிமார் பலர் இருப்பர்.

2. ஒவ்வொரு கட்டிலுக்கும் அருகில் ஒரு சிறிய பெட்டி இருப்பதைக் கவனி. அதன் மேல் என்ன இருக்கிறது? அதன் மேல் மருந்துப் புட்டிகள் இருக்கின்றன. பெட்டியின் மேல் பலகைக்கு அடியில் இரண்டு அறைகள் இருக்கின்றன. அவற்றில் நோயாளிக்கு வேண்டும் பால், ரொட்டி, பழம் முதலியன வைக்கப்பட்டு இருக்கும்.

3. ஒவ்வொரு கட்டிலுக்கும் மேலே சுவரில் ஓர் அட்டை தொங்கவிடப்பட்டு இருக்கும். அதன்மீது ஒரு கடிதம் இருக்கும். அதில் நோயாளியின் பெயர், நோயின் பெயர், மருந்தைச் சாப்பிடும் நேரம், உணவை உட்கொள்ளும் நேரம் முதலியன எழுதப்பட்டு இருக்கும்.

4. தாதிமார் என்ன செய்கின்றனர்? முதல் தாதி மருந்தைக் கையில் வைத்திருக்கின்ருள். இரண்டாம் தாதியும் மூன்ரும் தாதியும் என்ன செய்கின்றனர் ?

5. வைத்தியர் வந்து நோயாளிகளைப் பார்ப்பது உண்டா ? வைத்தியர் காலை வேளையில் வந்து நோயாளிகளைப் பார்த்துவிட்டுப் போவார். ஆனுல் நோயாளிகளை எப்பொழுதும் கவனித்துக் கொண்டிருப்பவர் தாதிமாரே ஆவர். அவர்கள் கவனிப்பினுல் நோயாளி விரைவில் குணமடைவான்.

கேள்விகள்

1. தாதிமார் யார்? அவர்கள் வேலை என்ன?
2. நோயாளியின் அருகில் இருப்பவை எவை?
3. அட்டையில் என்ன எழுதப்பட்டிருக்கும்?

பயிற்சி

1. வைத்தியசாலை, நோயாளி, மருந்து, ரொட்டி— இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்துச் சொல்.
2. நீ கண்ட வைத்தியசாலை ஒன்றைப் பற்றிச் சுருக்கிச் சொல்.
3. ஐந்தாம் பிரிவில் உள்ள பெயர்ச் சொற்களைக் கூறு.
4. 2, 3-ஆம் பிரிவுகளில் உள்ள ஒருமை, பன்மைப் பெயர்களைக் கூறு.
5. கோடிட்ட இடங்களில் தக்க சொற்களை அமைத்து எழுது.—
   (1) நோயாளி — இருக்கிறான்.
   (2) தாதிமார் — க் கவனிக்கின்றனர்.
   (3) நோயாளிக்கு — சிறிய பெட்டி —.
6. **அறை**—கட்டிடத்தின் ஒரு பகுதி.
   அரை—ஒன்றில் பாதி (எண்)

இவ்விரண்டிற்கும் உள்ள வேறுபாட்டைக் கவனி.

---

11. முயல்வேன்.

1. ஆல மரத்துக் கிளிஒன்று
குஞ்சுகள் இரண்டினைப் பொரித்ததுவே.

2. பொரித்த காலம் மழைக்காலம்
பெரிதும் துன்பப் படுங்காலம்.

3. ஆண்கிளி மரக்கிளை மீதமர்ந்தே
அழகாய்ப் பாட்டுகள் பாடிற்றே.

4. பெண்கிளி கூட்டில் அமர்ந்திருந்தே
தன்குஞ் சுகளைக் காத்ததுவே.

5. மழைபோய்க் கோடை வந்ததுவே;
கிளிகள் களிப்புடன் ஆடினவே.

6. தாய்க்கிளி கூறிற்று: 'குஞ்சுகளே !
தத்திப் பறக்கப் பழகுங்கள்'

7. 'அம்மா ! பறக்கப் பழகுவமே ;
அம்மா ! முயல்வோம்,' என்றனவே.

8. 'கந்தனை நடந்திடு' என்றாலோ,
'ஏன் நடப்பது ?' என்றிடுவான்.

9. ஏன் நடப்பது?' என்னுமல்
'முயல்வேன்' என்பது நன்றாகும்.

10. பெரியோர் 'செய்'எனச் சொன்னக்கால்
'முயல்வேன்' என்பதே மூதறிவு.

12. கொசுக்களும் ஜுரமும்.

(ஒரு சம்பாஷணை)

அவசரம்	ஆசிரியர்	ஜுரம்	வருந்துகிருன்
தபாலாபீஸ்	குனைன்	மாத்திரை	வீதம்
போட்டுக்கொள்	மற்ற	உறிஞ்சுகையில்	செலுத்தி
மலேரியா	கொசுவலை	பின்னப்பட்ட	எனப்படும்
கிராமவாசி	சுலபம்.	காலணு	இரத்தம்

'கோவிந்தா, ஏன் இவ்வளவு அவசரமாகப் போகின்ருய்? எங்குப் போகின்ருய்? என்று ஆசிரியர் கோவிந்தனைக் கேட்டார்.

கோவிந்தன் :—ஐயா, கோபாலன் ஜுரத்தால் வருந்துகிருன்; வைத்தியரை அழைத்துவரப்போகிறேன்.

ஆசிரியர் :—ஆம்; இதை நான் எதிர்பார்த்தேன். வா, கோபாலனைப் போய்ப் பார்க்கலாம்.

இருவரும் கோபாலன் வீட்டை அடைந்தனர். ஆசிரியர் கோபாலனைப் பார்த்தார்; 'கோவிந்தா, நீ தபாலாபீசுக்குச் சென்று குனைன் மாத்திரைகள் நான்கு வாங்கி வா. அவை இந்த ஜுரத்தை நிறுத்திவிடும்', என்ருர்.

கோவிந்தன் உடனே தபாலாபீசுக்கு ஓடினன். ஒரு மாத்திரை காலணு வீதம் நான்கு மாத்திரைகளை வாங்கி வந்தான். ஆசிரியர், கோபாலனைப் பார்த்து, 'கோபாலா, இப்பொழுது இரண்டு மாத்திரைகளை வாயில் போட்டுக்கொள்,' என்ருர்.

கோபாலன் :—ஐயா, இந்த இரண்டு மாத்திரைகளே ஜுரத்தை நிறுத்திவிடுமா?

ஆசிரியர் :—ஆம்; நிறுத்திவிடும். நிறுத்தாவிட்டால், நான் நாளை வந்து மற்ற இரண்டையும் தருவேன்.

பின்பு கோவிந்தனும் ஆசிரியரும் வெளியே சென்றனர். அப்போது கோவிந்தன், 'ஐயா, இந்த ஜுரம் வரக் காரணம் என்ன? ஒரு வாரத்துக்கு முன் கோபாலன் தந்தையார் ஜுரத்தால் வருந்தினார்,' என்றான்.

ஆசிரியர் :—கோவிந்தா, கோபாலனும் அவன் தந்தையாரும் கொசுக்களால் கடிக்கப்பட்டனர். கொசுக்கள் நமது உடலில் உள்ள இரத்தத்தை உறிஞ்சுகையில் அவற்றினிடம் உள்ள விஷத்தை நம் உடலில் செலுத்தி விடுகின்றன. அதனால், இந்த ஜுரம் உண்டாகிறது. இதற்கு 'மலேரியா ஜுரம்' என்பது பெயர்.

கோவிந்தன் :—ஐயா, கொசுக்கள் நம்மைக் கடிக்காமல் இருக்க என்ன செய்யலாம்?

ஆசிரியர் :—கொசு வலையை வாங்கிக் கட்டிக்கொண்டு அதற்குள் படுத்துக்கொள்ள வேண்டும்.

கோவிந்தன் :—கொசு வலை என்பது என்ன?

ஆசிரியர் :—கொசு உள்ளே நுழையாதபடி நூலால் பின்னப்பட்ட வலை 'கொசு வலை' எனப்படும்.

கோவிந்தன் :—அதன் விலை என்ன?

ஆசிரியர் :—அதன் விலை மூன்று அல்லது நான்கு ரூபாய் இருக்கும்.

கோவிந்தன் :—ஐயா எளிய கிராம வாசிகளான நாங்கள் மூன்று அல்லது நான்கு ரூபாய்க்கு எங்கே போவது ?

ஆசிரியர்:— தம்பி, வைத்தியருக்குப் பணம்கொடுப்பதை விடக் கொசு வலை வாங்கிக்கொள்வது சுலபம் அல்லவா ?

கேள்விகள்

1. மலேரியா ஜுரம் எப்படி உண்டாகிறது?
2. குனைன் மாத்திரை ஏன்?
3. அஃது எங்கே கிடைக்கும்?
4. ஆசிரியர் உபதேசம் யாது?

பயிற்சி

1. அவசரம், ஆசிரியர், உறிஞ்சு, செலுத்தி - இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்துச் சொல்.
2. இப்பாடத்தின் விஷயத்தைச் சுருக்கி, 'ஜுரத்தின் காரணம்-அதைப் போக்கும் முறை-அதைத்தடுக்கும் முறை' என்பன பற்றி 6 வாக்கியங்கள் சொல்.
3. இப்பாடத்தில் வந்த இடத்தின் பெயர்களைக் குறி.
4. பொருள்களின் பெயர்களைக் குறி.
5. ஒருமை, பன்மைகளைக் குறி.
6. **வருந்தினர், ஓடினன்** — இவை அவரவர் செய்த **வினை** (தொழிலை)யைக் குறிக்கும் சொற்கள் அல்லவா? ஆதலின் இவை **வினைச்சொற்கள்** எனப்படும்.

13. அரசனுக்கும் நியாயம் உண்டு.

கடற்கரை	அரண்மனை	ஆட்கள்	கண்டு பிடி
செம்படவன்	திரண்ட	அமைப்பதாயின்	சாஸ்திரத்தில்
உறுதியாக	தரை மட்டம்	அறியாயோ	உறுமினுன்
நகரத்தில்	நீதிமன்றம்	நியாயாதிபதி	நியாயம்
ஆக்குதல்	இயலாது	மகிழ்ந்தான்	மதிப்பு.

1. ஓர் அரசன் கடற்கரை ஓரத்தில் தன் அரண்மனையைக் கட்டத் தக்க இடம் பார்த்துவரும்படி தன் ஆட்களை அனுப்பினுன். அந்த ஆட்கள் சென்று ஒரு நல்ல இடத்தைக் கண்டு பிடித்தார்கள். ஆனுல், அந்த இடத்துக்குப் பக்கத்தில் ஒரு செம்படவன் பெரிய வீட்டைக் கட்டிக்கொண்டு இருந்தான்.

2. செம்படவன் அந்த வீட்டைவிட்டுப் போனுல் திரண்ட பொருள் தருவதாக அரசனுடைய ஆட்கள் கூறினுர்கள். 'அரசர் அரண்மனை அமைப்பதாயின், பக்கத்தில் செம்படவன் இருக்கக் கூடாதென்று எந்தச் சாஸ்திரத்தில் சொல்லி இருக்கிறது? நான் என் வீட்டைக் காலி செய்யமுடியாது' என்று செம்படவன் உறுதியாகக் கூறிவிட்டான்.

3. ஆட்கள் செம்படவன் கூறியதை அரசனிடம் தெரிவித்தார்கள். அரசன் உடனே செம்படவனை வரழைத்து, 'நான் விரும்பினுல் உன் வீட்டைத் தரை மட்டம் ஆக்க முடியும் என்பதை நீ அறியாயோ?' என்று உறுமினுன்.

4. செம்படவன், 'நான், நீர் சொல்வதை அறியேன். ஆனால், இந்த நகரத்தில் நீதிமன்றமும் நியாயாதிபதிகளும் நியாயமும் உள்ளபோது நீர் என் வீட்டைத் தரைமட்டம் ஆக்குதல் இயலாது என்பதை நான் நன்றாய் அறிவேன். அரசனுக்கும் நியாயம் உண்டு; நியாயம் தவறின், அரசன் அரசன் ஆகான்' என்றான்.

5. அரசன் செம்படவன் வார்த்தைகளைக் கேட்டு மகிழ்ந்தான்; 'எனது நாட்டுச் செம்படவனும் நியாயத்துக்கு மதிப்புத் தருகின்றான் என்றால், நான் எப்படி நடந்துகொள்ள வேண்டும்!' என்று தனக்குள் கூறிக்கொண்டான்; தன் புதிய அரண்மனையைச் செம்படவன் வீட்டுக்குப் பக்கத்திலேயே கட்டிக் கொண்டான். தம்பி, நீ இக்கதையால் அறிவது யாது?

கேள்விகள்

1. செம்படவன் அரசன் ஆட்களிடம் என்ன சொன்னான்?
2. அரசன் செம்படவனிடம் கூறியது யாது?
3. செம்படவன் தந்த பதில் யாது?
4. முடிவு என்ன?
5. நீ இப்பாடத்தால் அறிவது யாது?

பயற்சி

1. கடல் + கரை = கடற்கரை, நியாயத்துக்கு = நியாயம் + அத்து + கு, வீட்டுக்கு = வீடு + கு.

இவற்றைப் போல, 'வீட்டை, ஆட்களை, பக்கத்தில், நகரத்தில்' இவற்றைப் பிரி.

2. கடற்கரை, அரண்மனை, நகரத்தில், உறுமினான்- இவற்றை உன் சொந்த வாங்கியங்களில் உபயோகித்துச் சொல்.

3. முதல் பிரிவில் உள்ள பெயர்ச் சொற்களைக் கூறு.

4. 2-ஆம் பிரிவில் உள்ள ஒருமை-பன்மைகளைக் கூறு.

5. 3, 5-ஆம் பிரிவுகளில் உள்ள வினைச்சொற்களைக் கூறு.

6. அரசன்—ஆளைக் குறிக்கும் சொல் (ஆண்பால் பெயர்).

அரசி—பெண்ணைக் குறிக்கும் சொல் (பெண்பால் சொல்).

வண்ணான், செம்படவன்—பெண்பால் கூறு.

தாய், அக்காள் - ஆண்பால் கூறு.

7. கோடிட்ட இடங்களில் தக்க சொற்களை அமை:-

(1) அரசனுக்கும்—உண்டு.

(2) நியாயம் — அரசன் — ஆகான்.

(3) தம்பீ, நீ — அறிவது — ?

14. காடுகள்

ஆயிரம்	கணக்கான	பட்டணம்	நாளடைவில்
அழிக்கப்பட்டன	அழகிய	தேக்கு	கருங்காலி
சந்தனம்	குங்கிலியம்	தேவதாரு	விறகு
முதலானவை	குளிர்ந்து	வீசிக்கொண்டே	உத்தரம்
அளவிறந்த	உயிர் நாடி	நேரிட்டால்	இவ்வாறு
பஞ்சம்	நடைபெறும்	சேவ்வனே	பீரோ

1. ஆயிரக் கணக்கான பெரிய மரங்கள் உள்ள இடம் காடு எனப்படும். இப்பொழுது பட்டணங்களாய் இருக்கும் இடங்கள் எல்லாம் ஒரு காலத்தில் பெரிய காடுகளாய் இருந்தவை. அவை நாளடைவில் அழிக்கப்பட்டன; அவ்விடங்களில் அழகிய பட்டணங்கள் ஏற்படுத்தப்பட்டன.

2. காடுகளில் தேக்கு, கருங்காலி, சந்தனம், குங்கிலியம், தேவதாரு, விறகுக்கு உபயோகப்படும் மரங்கள் முதலானவை வளர்கின்றன.

3. இக்காடுகள் இருக்கும் இடங்கள் எப்போதும் குளிர்ந்து இருக்கும். அங்குச் சுத்தமான காற்று எப்போதும் வீசிக்கொண்டே இருக்கும்; மழையும் அதிகம்.

4. கப்பல், புகை வண்டித் தொடர், மோட்டார் பஸ், பெரிய உத்தரங்கள், பெட்டிகள், பீரோக்கள், கட்டில்கள், நாற்காலிகள், கதவுகள், பெஞ்சுகள் முதலான அளவிறந்த பொருள்கள் செய்ய மரங்களே அவசியமானவை.

5. மரங்கள் இல்லாவிடில் நாம் ஒன்றும் செய்ய முடியாது. அவை நமக்கு உயிர் நாடியாய் இருப்பவை. ஆதலால், அவை இருக்கும் காடுகளை நாம் அழிக்கக் கூடாது. மரங்களை வெட்ட நேரிட்டால், உடனே

அவ்விடங்களில் வேறு மரங்களை வைத்து வளர்க்க வேண்டும். இவ்வாறு செய்தால், மரப் பஞ்சம் உண்டாகாது. எல்லா மர வேலைகளும் செவ்வனே நடைபெறும்.

கேள்விகள்

1. காடுகளில் வளரும் மரங்கள் எவை ?
2. காட்டு மரங்களால் என்ன பயன் உண்டு ?
3. மரங்கள் நமக்கு அவசியமானவையா ? எப்படி ?

பயிற்சி.

1. நாளடைவில், பஞ்சம், உத்தரம், உயிர்நாடி— இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்துச் சொல்.

2. கோடிட்ட இடங்களில் தக்க சொற்களை அமைத்துப் படி :—

   (1) காட்டில்——அதிகம்.

   (2) மரங்களே——உயிர்——இருப்பவை.

   (3) காடுகளில்——அதிகம்.

3. 4ஆம் பாராவில் உள்ள பன்மைப் பெயர்களைச் சொல்; அவற்றுக்கு உரிய ஒருமைப் பெயர்கள் எவை?

4. 5-ஆம் பாராவில் உள்ள பெயர்ச் சொற்களையும் வினைச் சொற்களையும் சொல்.

5. அளவிறந்த, நாடியாய், அவசியமானவை— இவற்றைப் பிரித்துக் காட்டு.

6. காலம் + இல், காடுகள் + ஆய், வீசி + கொண்டு, அளவு + இறந்த, நாடி + ஆய்.— இவற்றைச் சேர்த்துப்படி.

15. உண்மையுள்ள இடைச்சிறுவன்

பிரபு	வெகுமதி	சந்தோஷமாய்	கஷ்டப்பட்டான்
முரட்டு	மேய்த்து	பட்சத்தோடு	கட்டளையிட்டார்
மறுபடி	நற்குணம்	அடக்குவதில்	பெற்றுக்கொள்ளும்
வியந்தார்	கமலநாதன்	படியண்டை	முடியாமல்.

1. கமலநாதப் பிரபுவினிடம் ஓர் இடைச்சிறுவன் இருந்தான். அவன் பிரபுவினுடைய மாடுகளை மேய்த்து வந்தான். அவனிடம் புதிய முரட்டு மாடு ஒன்று விடப்பட்டது. ஒரு நாள் அவன் அப்புதிய மாட்டை அடக்கிக்கொண்டு போக முடியாமல் கஷ்டப் பட்டான். அப்போது கமலநாதப் பிரபு அவ்வழியே போய்க்கொண்டு இருந்தார்.

2. அவரே தன் எஜமானர் என்பதைச் சிறுவன் அறியான்; அவரை முன்பு பார்த்ததும் இல்லை. அவன் அவரைப் பார்த்து, 'ஐயா, இந்த மாட்டை அடக்குவதில் எனக்கு உதவி செய்வீரா? என் எஜமான ரது வீட்டுக்குப் போனதும் எனக்கு வெகுமதி கிடைக் கும். அதில் பாதியை உமக்குத் தருவேன்,' என்றான்.

3. பிரபு உடனே சென்று மாட்டை அடக்குவ தில் உதவி செய்தார். மாட்டை ஓட்டிக்கொண்டு இரு வரும் பிரபுவின் வீட்டை நோக்கி நடந்தனர். பிர புவை வெளியே நிறுத்திவிட்டுச் சிறுவன் உள்ளே சென்றான். அவன் மறைந்ததும் பிரபு வேறு வழியாக வீட்டினுள் நுழைந்தார்; இடைச்சிறுவனுக்கு இரண்டு அரை ரூபாய்களைக் கொடுக்கும்படி கட்டளையிட்டார்; மறுபடியும் அவர் வாயிற்படியண்டை வந்து நின்றார்.

4. இடைச்சிறுவன் சந்தோஷமாய் வெளியே வந்தான். அவன் பிரபுவை நோக்கி, 'ஐயா, என் எஜமானர் எனக்கு இரண்டு அரை ரூபாய்களைக் கொடுத்தார். அவற்றில்ஒன்றைநீர் பெற்றுக்கொள்ளும்,' என்று கூறி, அவருக்கு ஓர் அரை ரூபாயைக் கொடுத்தான்.

5. பிரபு இடைச்சிறுவனது நற்குணத்தைக் கண்டுவியந்தார். அவர் அவனை அன்று முதல் பட்சத்தோடு நடத்தி வந்தார். உண்மையாக நடப்பவர் எக்காலத்திலும் நன்மையை அடைவர் என்பது இதனால் விளங்குகிறது அல்லவா ?

கேள்விகள்

1. இடைச் சிறுவன் பிரபுவை வேண்டியது யாது?
2. அவன் சொன்ன சொல்லை எப்படிக் காத்தான்?
3. நீ இப்பாடத்தால் அறிவது யாது?
4. இப்பாடத்தை மவுனமாகப்படி; கதையைச் சுருக்கி எழுது.

பயிற்சி

1. மேய்த்து, அடக்குவதில், கட்டளை, நற்குணம், பட்சத்தோடு—இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்துச் சொல்.
2. பிரபுவை பட்சத்தோடு, சந்தோஷமாய், மாட்டை—பிரித்துக்காட்டு.
3. மூன்றும் பாராவில் உள்ள வினைச் சொற்களைக் கூறு.
4. அதே பாராவில் உள்ள பெயர்ச் சொற்களைக் கூறு.
5. நான்கு, ஐந்தாம் பாராக்களில் உள்ள ஒருமை பன்மைகளைக் கூறு.



16. மோகனன்

மோகனன்	முகத்தை	படிந்திருக்கும்	உகிர்கள்
திரண்டு	சீவுதல்	பேன்கள்	கூறினும்
அழைத்தனர்	அழுக்கில்	புரள்வது	நினேயோம்
நான்குடன்	அனைவரும்	நகைத்தனர்	வெட்கம்
ஆனுன்	இதுவரை.		

1. மோகனன் தினமும் குளிப்பதில்லை;
முகத்தைச் சுத்தம் செய்வதில்லை.

2. உடம்பில் அழுக்கோ படிந்திருக்கும்;
உகிர்களில் அழுக்குச் சேர்ந்திருக்கும்.

3. துணிகளைத் தினமும் துவைப்பதில்லை;
துணிகளில் அழுக்குத் திரண்டிருக்கும்.

4. தலையைச் சீவுதல் வழக்கமில்லை;
தலையில் பேன்கள் குடியிருக்கும்;

5. பிள்ளைகள் கூறினும் கேட்பதில்லை;
பெற்றோர் கூறினும் கேட்பதில்லை.

6. மாணவர் ஒருநாள் மோகனனை
'மோகனனே!' என்று அழைத்தனரே.

7. 'அழுக்குடைப் பொருள்களைத் தின்பதுவும்
அழுக்கில் புரள்வதும் பன்றிஒன்றே

8. என்று நினைத்தோம் இதுவரையில்;
இனியாம் அப்படி நினையோமே.

9. இவனை கால்கள் நான்குடனே
இருப்பின் நலமே,' என்றனரே.

10. மாணவர் அனைவரும் கைகொட்டி
'ஆ! ஆ!' என்றே நகைத்தனரே.

11. வெட்கம் அடைந்தான் மோகனனே;
அதுமுதல் நல்லவன் ஆனனே.

கேள்விகள்

1. மோகனன் எப்படிப்பட்டவன்?
2. பிள்ளைகள் அவனிடம் யாது கூறினர்?
3. நீ இப்பாடத்தில் அறிவது யாது?

பயிற்சி

1. இவ்விஷயத்தை 10 வரிகளில் எழுது?
2. இதனை மோகனன் கூறுவது போலக் கூறு.
3, இதனை மாணவர் கூறுவதுபோலக் கூறு.

17. சுகாதார விதிகள்

கந்தை	சூடுள்ள	ஊற்றுநீர்	பழுக்காதது
குழாய்	சுவாசி	முன்னரே	தேகப்பயிற்சி
பேதி	தின்னுதே	குளத்துநீர்	சமைக்கப்பட்ட
கசக்கி	சாக்கடை	இவற்றில்	

1. நீ சுத்தமான சூடுள்ள உணவைச் சாப்பிடு. உணவு நன்ருய்ச் சமைக்கப்பட்டதாய் இருக்க வேண்டும். பழுக்காததும் அதிகமாய்ப் பழுத்ததுமான பழத்தைத் தின்னுதே.

2. நீ சுத்தமான நீரைக்குடி. குளத்து நீரைக் குடிக்காதே. ஆற்று நீர், ஊற்று நீர், குழாய் வழியாக வரும் நீர் ஆகிய இவற்றில் எதையேனும் குடி. அசுத்த நீரால் ஜுரம் அல்லது பேதி உண்டாகும்.

3. நீ சுத்தமான காற்றைச் சுவாசி. இருட்டு அறையில் உட்காராதே; தூங்காதே. முன்னரே நீ வெளிவிட்ட காற்று உடம்புக்குக் கெடுதலை உண்டு பண்ணும்.

4. நீ தினமும் சுத்தமான நீரில் குளிக்க வேண்டும். உடம்பை நன்ருய்த் தேய்த்துக் குளி.

5. உன்னுடைய உடைகள் சுத்தமாய் இருக்க வேண்டும். கந்தையானுலும் தினமும் கசக்கிக்கட்டு. நன்ருய்க் காய்ந்த உடைகளையே உடுத்தவேண்டும்.

6. நீ அடிக்கடி உனது வீட்டுக்கு வெள்ளை அடி. அழுக்கு நீரைச் சாக்கடை வழியாகத் தள்ளிவிடு. அழுக்கே எல்லா நோய்களுக்கும் தாயாகும்.

7. தினந்தோறும் காலையிலும் மாலையிலும் திறந்த வெளியில் தேகப்பயிற்சி செய்; ஓடு; விளையாடு.

8. நீ, உனக்கு நோய் வராமல் உன்னைக் காப்பாற்றும்படி கடவுளை வேண்டிக்கொள்; உனக்கு நல்ல அறிவைத் தரும்படி அவரை வேண்டு; காலையிலும் இரவிலும் கடவுளைப் பிரார்த்தனை செய். நீ சுகம் அடைவாய்.

கேள்விகள்

1. சுகாதார விதிகள் எவை?
2. உணவு சம்பந்தமான விதிகள் எவை?
3. உடை சம்பந்தமான விதிகள் எவை?
4. உடல் சம்பந்தமான விதிகள் எவை?
5. பிரார்த்தனை எதற்கு வேண்டும்?

பயிற்சி

1. பேதி, முன்னரே, சாக்கடை, பயிற்சி, சூடு—இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்துச் சொல்.
2. வீட்டுக்கு, வழியாக, உன்னை, கடவுளை—பிரித்துக் காட்டு.
3. நீர் + ஐ, சுத்தம் + ஆய், உடம்பு + கு, சுத்தம் + ஆன—இவற்றைச் சேர்த்துப் படி.
4. இப்பாடத்தில் உள்ள ஒருமை—பன்மைகளைக் கூறு.
5. பெயர்ச்சொற்களைக் கூறு.
6. தூங்கு × தூங்காதே—எதிர்ப்பதங்கள். உடுத்து, சுவாசி, தின், ஓடு—எதிர்ப் பதங்களைக் கூறு.



18. கலியுக பீமன்—காமா

குஸ்தி	காமா	கலியுகம்	பீமன்
நடுத்தர	ஐம்பது	காஷ்மீர்	முன்னேர்
இளமையில்	சிலம்பம்	குத்துச்சண்டை	இந்தியா
சுற்றினர்	ஜயித்தார்	இலண்டன்	வீரர்
எல்லோரையும்	எளிதில்	தோற்கடித்தார்	பயனுக
ஜான்புல்	சாம்பியன்ஷிப்	பிரிட்டிஷ்	பரிசு
தேசம்	வேல்ஸ்	இளவரசர்	கதை
பெரியார்	நீடுழி	ஆண்டவர்.	யாவராலும்

1. படத்தில் இருப்பவர் காமா என்னும் பெயர் உடையவர். இவர் குஸ்தியில் உலகப் புகழ் பெற்றவர்; பார்வைக்குப் பீமனைப் போல இருப்பவர்; அழகான சிவந்த உடலும் நடுத்தர உயரமும் உடையவர். இவருக்கு இப்போது ஐம்பது வயதாகிறது.

2. காமா முகம்மதியர். இவர் காஷ்மீர் நாட்டிற் பிறந்தவர். இவர் முன்னோர்கள் குஸ்தியில் பெயர் பெற்றவர்கள்.

3. இவர் இளமையில் இருந்தே சிலம்பம், குஸ்தி, குத்துச் சண்டை முதலியவற்றில் பழகித் தேர்ச்சி அடைந்தார்; தமது இருபத்து நான்காம் வயதில் இந்தியா முழுவதும் சுற்றினார்; இந்தியாவில் இருந்த எல்லாக் குஸ்தி வீரர்களையும் ஜயித்தார்.

4. பிறகு இவர் இலண்டனுக்குச் சென்றார். அங்கு எல்லா நாட்டுக் குஸ்திவீரர்களும் வந்தார்கள். அவர்கள் எல்லோரையும் காமா வெகு எளிதில் தோற்கடித்தார். அதன் பயனாக ஜான்புல் சாம்பியன்ஷிப் என்னும் பிரிட்டிஷ் குஸ்திப் பரிசைப் பெற்றார்; அத்துடன் 'உலகில் குஸ்தி அரசர் இவர் ஒருவரே' என்று யாவராலும் புகழப் பெற்றார்.

5. அதன் பின்னர், காமா ஒவ்வொரு தேசத்துக்கும் சென்றார்; அந்த அந்தத் தேசத்துக் குஸ்தி விதிகளின்படி குஸ்தி செய்தார்; அந்தந்த நாட்டுப் பெரிய வீரர்களைத் தோற்கடித்தார்.

6. 1922-ஆம் ஆண்டு வேல்ஸ் இளவரசர் நம் நாட்டுக்கு வந்திருந்தார். அவர் கலியுக பீமனான காமாவுக்கு ஒரு வெள்ளிக் கதையைப் பரிசாகத் தந்தார். அக் கதையைத் தாங்கிக்கொண்டு நம் குஸ்தி அரசர் நிற்பதைப் படத்தில் பாருங்கள்.

7. குஸ்தியில் நம் நாட்டுக்குப் பெரும் புகழ் தேடிய இப்பெரியார் நீடூழி வாழ அருள் புரியும்படி ஆண்டவரை நாம் வேண்டுவோமாக.

கேள்விகள்

1. காமா எந்த ஊரினர்? அவர் உடம்பு எப்படி இருக்கிறது?
2. அவர் எவற்றில் வல்லவர்?
3. அவர் பெற்ற பரிசுகள் எவை?
4. அவர் யாரைக் குஸ்தியில் வென்றார்?
5. நாம் ஏன் அவரைப் பற்றிப் பெருமை அடைய வேண்டும்?

பயிற்சி

1. முன்னோர், குஸ்தி, பெரியார், எளிதில், இந்தியா- இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்துச் சொல்.
2. முதல் மூன்று பாராக்களில் உள்ள பெயர்ச் சொற்களைச் சொல்.
3. 4, 5 - ஆம் பாராக்களில் உள்ள வினைச் சொற்களைச் சொல்.
4. 6, 7 - ஆம் பாராக்களில் உள்ள ஒருமை - பன்மைகளைச் சொல்.
5. இளவரசர், இவன், குயவன்—பெண்பால் கூறு.
6. பார்ப்பனி, தட்டாத்தி, தோட்டிச்சி—ஆண்பால் கூறு.
7. இப்பாடத்தை **மௌனமாகப்** படி; சுருக்கி எழுது.

19. காக்கையும் நரியும்

படம் பார்த்துக் கதை சொல்,



கேள்விகள்

1. இக்கதையில் சம்பந்தப் பட்டவர் யார் யார் ?
2. இக்கதையில் சம்பந்தப்பட்ட உயிர்கள் எவை ?
3. நரி கூறிய தந்திரம் யாது? அஃது எப்படிப் பலித்தது ?
4. நீ இதனுல் அறியும் நீதி யாது ?

பயிற்சி

1. இக்கதையைக் காக்கை கூறுவது போலக் கூறு.
2. இதனை நரி கூறுவது போலக் கூறு.
3. இதனைப் பாம்பு கூறுவதுபோலக் கூறு.
4. இதனை வேலையாட்கள்சொல்வதுபோலச் சொல்.
5. இதனை இராணி சொல்வது போலச் சொல்.
6. தந்திரம், ஆட்கள், புற்று, பாம்பு, மாலை— இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்துச் சொல்.
7. இக்கதையை எத்தனைப் பகுதிகளாகப் பிரிக்கலாம் ? பிரித்துச் சொல்.
8. இதனைச் சுருக்கி 12 வரிகளில் எழுது.

20. கடவுள் கவனிக்கிருர்

(ஒரு சம்பாஷணை)

பழனி	விரும்பின	சொன்ஞை	கள்ளத்தனம்
திருடன்	ஏமாற்றம்	உடையதாய்	திருட்டுத்தனம்
கட்டளை	புத்தகப்பை	தெரியாமலா	தெரியாமல்

வரதன்: பழனி, இந்தப் புத்தகம் எவ்வளவு அழகான படங்களை உடையதாய் இருக்கிறது, பார்த்தாயா?

பழனி: வரதா, இந்தப் புத்தகம் நன்ருய்த்தான் இருக்கின்றது. இது யாருடைய புத்தகம்?

வரதன்: இது கோபாலன் புத்தகம்.

பழனி: அவன் இதை உனக்குக் கொடுத்தாஞ?

வரதன்: இல்லை. நான் அவனது புத்தகப் பையில் இருந்து இதை எடுத்துக்கொண்டேன்.

பழனி: என்ன! அவனுக்குத் தெரியாமலா?

வரதன்: ஆம்.

பழனி: வரதா, கோபாலனுக்குத் தெரியாமல் இப்புத்தகத்தை அவன் பையில் இருந்து எடுத்ததால், நீ திருடன் ஆகவில்லையா?

வரதன்: திருடஞ? அதெப்படி? நான் கோபாலன் பையில் இருந்துதானே எடுத்தேன்? நான் எப்படித் திருடன் ஆவேன்?

பழனி: கோபாலன் உன்னை எடுத்துக்கொள்ளச் சொன்ஞை?

வரதன் : இல்லே. நான் எடுத்தபோது அவன் அங்கு இல்லே. ஆனுல், நான் விரும்பின புத்தகத்தை எடுத்துக்கொள்வது திருட்டுத்தனம் ஆகுமா ?

பழனி : ஆம். அது கள்ளத்தனமே. நான் உன்னுடைய புத்தகத்தையோ கற்பலகையையோ எடுத்துக்கொள்வதை நீ விரும்புவாயா ?

வரதன் : ஒருபோதும் விரும்பமாட்டேன். நீ என்னுடைய பொருள்களே எடுக்கலாகாது.

பழனி : அப்படியானுல், நீ மட்டும் கோபாலன் புத்தகத்தை எடுக்கலாமா ? வரதா! இதை நினேவில் வைத்துக்கொள் : நீ புத்தகம் திருடினதைக் கோபாலன் பார்க்கவில்லே. ஆனுல் கடவுள் பார்த்துக்கொண்டிருந்தார். அவர் நாம் இப்பொழுது பேசுவதைக் கேட்டுக்கொண்டும் இருக்கிருர். நீ யாரை ஏமாற்றினுலும், கடவுளே ஏமாற்ற முடியாது. ' திருடக் கூடாது ' என்பது கடவுள் கட்டளேயாகும்.

வரதன் ஒன்றும் பேசவில்லே. அவன் மெதுவாகப் போய்த் தான் திருடின புத்தகத்தைக் கோபாலன் புத்தகப் பையில் போட்டுவிட்டான்.

கேள்விகள்

1. பழனி, கோபாலன் - எவன் நல்லவன் ? ஏன்?
2. பழனி செய்த உபதேசம் யாது ?
3. வரதன் செய்த தவறு யாது ?
4. நீ இப்பாடத்தால் அறிவது யாது ?

பயிற்சி

1. இந்நிகழ்ச்சியைச் சுருக்கி எழுது.

2. தெரியாமலா, சொன்னன, விரும்பின, திருட்டு - இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுது.

3. கோடிட்ட இடங்களில் தக்க சொற்களை அமைத்து எழுது :—

1. வரதன் கோபாலன்—திருடினன்.
2. பழனி—புத்தி— .
3. வரதன் கோபாலன்——புத்தகம் போட்டு விட்டான்.

4. தக்க சொற்களைச் சேர்த்துப் படி:—

வரதன்	ஒரு	பெண்
வள்ளி	ஒரு	விலங்கு
கழுதை	ஒரு	பையன்
அவன்	ஒரு	பேசினன்
சீதை	ஒரு	போனள்

5. இப்பாடத்தில் உள்ள ஆண்பால் பெயர்களை எழுது.
6. பழனி கூறுவதுபோல இந்நிகழ்ச்சியைக் கூறு.
7. வரதன் கூறுவதுபோது இதனைக் கூறு.

21. கமலமும் அம்மை குத்துதலும்

அம்மை	குத்துதல்	முழுகிவிடும்	கஷ்டப்படு
தீர்ந்தது	ஆண்டுகள்	உருக்கமாக	திடுக்கிட்டனர்
இழந்த	குற்றத்தால்	வற்புறுத்தி	குருடாய்விட்டன.

1. கமலம் ஆறு மாதக் குழந்தை. காந்தாமணி எதிர் வீட்டுக் குழந்தை. காந்தாமணியின் பெற்ருேர் அவள் ஆறுமாதக் குழந்தையாய் இருந்தபோது அவளுக்கு அம்மை குத்திவிட்டனர். கமலத்தின் பெற்ருேர் அவளுக்கு அம்மை குத்தவில்லை. 'அம்மை குத்தாவிட்டால் என்ன முழுகிவிடும்?' என்று கமலத்தின் தாய் கூறி வந்தாள்.

2. கமலம் இருந்த கிராமத்தில் திடீரென அம்மை நோய் கண்டது. காந்தாமணி அம்மை குத்திக் கொண்டாள் ஆதலால், அவளுக்கு அந்நோய் வரவில்லை. கமலம் அம்மை குத்திக்கொள்ளவில்லை அல்லவா? அவளுக்கு அந்த நோய் வந்தது.

3. பாவம்! கமலம் மிகவும் கஷ்டப்பட்டாள். நோயும் தீர்ந்தது. ஆனல், பாவம்! அவள் கண்கள் குருடாய்விட்டன.

4. பதினறு ஆண்டுகள் கடந்தன. காந்தாமணி பள்ளிக்கூடத்தில் படித்து வந்தாள். கமலம் கண் தெரியாமல் வீட்டிலேயே இருந்து கஷ்டப்பட்டாள். காந்தாமணி கமலத்துக்குப் பல கதைகள் சொல்லி வந்தாள். ஒரு நாள் அவள் அம்மை குத்துவதைப்

பற்றி உபாத்தியாயர் சொன்ன பாட்டைப் பாடினுள். கமலம் ஆவலோடு அப்பாட்டைக் கேட்டுப் பாடம் செய்துகொண்டாள்.

5. கமலம் நன்ருகப் பாடுபவள். அவள் தன் அண்ணனேடு பக்கத்துக் கிராமங்களுக்குச் சென்ருள்; அங்கு இருந்தவர்களுக்கு அம்மை குத்துவதைப் பற்றிய பாட்டை உருக்கமாகப் பாடிக் காட்டினுள்; தன் தாய் செய்த குற்றத்தால் தான் கண் இழந்ததைக் கூறினுள்.

6. கமலத்தின் பாட்டையும் கதையையும் கேட்ட ஜனங்கள் திடுக்கிட்டார்கள். அவர்கள் உடனே தங்கள் குழந்தைகளுக்கு அம்மை குத்திவிட்டார்கள். கமலத்தின் பாட்டாலும் கதையாலும் பக்கத்துக் கிராமங்களில் அம்மை நோய் தலைகாட்டவில்லை.

7. கமலம் தான் இறக்கும் வரையில் அம்மை குத்துவதைப் பற்றிய பாட்டை மறக்கவே இல்லை. அவள் 'நான் கண் இழந்தாலும், மற்றவர் சுகமாய் இருக்கவேண்டும்,' என்ருள். அதனுல், அவள் எல்லாக் குழந்தைகளுக்கும் அம்மை குத்துவதை வற்புறுத்தி வந்தாள்.

கேள்விகள்

1. கமலத்தின் தாய் என்ன கூறி வந்தாள்?
2. கமலம் அடைந்த நஷ்டம் யாது?
3. காந்தாமணி கமலத்திற்குச் செய்த உதவி யாது?

4. கமலம் செய்த வேலை யாது?
5. நீ இப்பாடத்தால் அறிவது யாது?

பயிற்சி

1. அம்மைகுத்து, உருக்கமாக, குற்றத்தால், திடுக்கிடு, வற்புறுத்தி—இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுது.
2. கமலத்தின் வரலாற்றை 10 வரிகளில் எழுது.
3. காந்தாமணி கமலத்தின் வரலாற்றைக் கூறுவதாகக் கூறு.
4. கமலமே தன் வரலாற்றைக் கூறுவதாகக் கூறு.
5. 4-ஆம் பாராவில் உள்ள பெயர்ச் சொற்களைக் கூறு.
6. 5, 6-ஆம் பாராக்களில் உள்ள வினைச் சொற்களைச் சொல்.
7. இப்பாடத்தில் உள்ள ஒருமை - பன்மைகளைச் சொல்.
8. கமலம் நன்றாகப் பாடுவாள், அவள் பல பாட்டுகள் பாடுவாள்—ஒரே வாக்கியமாக மாற்று.
9. கமலம் அம்மை குத்திக் கொள்ளாததால் கண் இழந்தாள்—இரண்டு தனி வாக்கியங்களாகப் பிரி.
10. அவன், இடையன், குறவன், மறவன்—பெண் பால் கூறு.

22. காட்சிகள்

படம் பார்த்து விஷயம் சொல்





23. வெண்ணிலா

வெளுத்திருக்கும்	வெண்ணிலா	முழுவதும்	நகர்வது
சிறுவ	அரிது	நித்தமும்	சொல்லாயோ
பண்போடு	ஆனந்தம்	தப்பாது	

பையன்: பால்போல் வெளுத்திருக்கும்
வெண்ணிலாவே!— நீ
பகல் முழுவதும் எங்கிருந்தாய்? வெண்ணிலாவே!

சந்திரன்: எப்போதும் இருப்பதிங்கே செல்வச் சிறுவ!—
இதைவிட்டு நகர்வதில்லை செல்வச் சிறுவ!

பை: பகலில் இருப்பதாயின், வெண்ணிலாவே!—உனைப்
பார்க்க முடியாததேன்? வெண்ணிலாவே!

சங்: சூரியன் ஒளியதிகம் செல்வச்சிறுவ!— அதனால்
பாரில்உள்ளோர் காண்பதரிது செல்வச்சிறுவ!

பை: குளிர்ந்த ஒளியுடைய வெண்ணிலாவே!— உனக்
கெவ்வாறு வந்ததது? வெண்ணிலாவே!

சங்: சூரியன் இடத்திருந்தே செல்வச்சிறுவ!—ஒளி
நித்தமும் பெறுகின்றேன் செல்வச்சிறுவ!

பை: சூரியன் இரவில்எங்கே வெண்ணிலாவே!-போய்ச்
சுற்றுகிறுன்? சொல்லாயோ? வெண்ணிலாவே!

சங்: சூரியன் இரவில்எங்கும் செல்வச்சிறுவ!—போய்ச்
சுற்றவில்லே; உண்மை இது செல்வச்சிறுவ!
பகலிலும் இரவினிலும் செல்வச்சிறுவ!—அவன்
பண்போடென் போல் இருப்பான் செல்வச்சிறுவ!
சுற்றுவது பூமி ஒன்றே செல்வச்சிறுவ!—நாங்கள்
சும்மா இருக்கின்ருேம் செல்வச்சிறுவ!

பை: அப்படியா! ஆனந்தம், வெண்ணிலாவே!—நீ
தப்பாது நாளேக்கும்வா வெண்ணிலாவே!

---

24. இரண்டு உழவர்

(ஒரு சம்பாஷணே)

சாமிநாதன்	பாழாயிற்று	மலர்ந்த	கழிந்தன
குப்புசாமி	நஷ்டம்	அறுவடை	வருகையில்
வெள்ளம்	அழலானுன்	மீண்டும்	சந்தித்தனர்
துக்கம்	வியப்புடன்	செலவழித்தால்	பெறலாம்

1. சாமிநாதன், குப்புசாமி என்னும் இரண்டு உழவர் தம் நிலங்களே உழுது பயிர் செய்தனர். பயிர் வளர்ந்து வருகையில், திடிரென ஆற்றில் வெள்ளம் வந்தது; பயிர் பாழாயிற்று. அதனுல், இருவரும் பெரு நஷ்டம் அடைந்தனர்.

2. சாமிநாதன் தனக்கு உண்டான நஷ்டத்தைப் பற்றியே நினேத்து நினேத்து அழலானுன்.

அவன் ஒரு வேலையையும் செய்யவில்லை. ஆறு மாதங்கள் கழிந்தன.

3. குப்புசாமியும் சாமிநாதனும் ஓர் இடத்தில் சந்தித்தனர். அப்போது சாமிநாதன், 'ஆ; நமக்கு உண்டான நஷ்டம் பற்றி உனக்கு நினைவு இருக்கிறதா? நான் அதையே நினைத்துக்கொண்டு இருக்கிறேன். நீ மீண்டும் பயிர் செய்து இருக்கிறாய் போலும்!' என்றான்.

4. குப்புசாமி மலர்ந்த முகத்தோடு, 'ஆம், நடந்து போனதைப் பற்றி நான் வருந்தவில்லை; வெள்ளம் அடங்கின உடனே வயலில் விதைத்தேன்; அறுவடையும் ஆய்விட்டது,' என்றான்.

5. சாமிநாதன், 'என்ன! அறுவடையும் ஆய் விட்டதா? நான் போனதைப் பற்றித் துக்கித்துக் கொண்டு இருந்தேனே தவிர, வேறு ஒன்றும் செய்ய வில்லையே?' என்றான்.

6. குப்புசாமி, 'நீ துக்கப்பட்டுக்கொண்டு இருந்த போது நான் மீண்டும் என் வேலையைத் தொடங்கினேன்; எனது வேலையும் முடிந்தது. இப்பொழுது எனக்குக் கவலை இல்லை,' என்றான்.

7. சாமிநாதன், 'நீ இழந்ததைப் பற்றித் துக்கப் படுவது இல்லையோ?' என்று வியப்புடன் கேட்டான். குப்புசாமி, 'இல்லை. துக்கப்படுவதில் நன்மை இல்லை என்பதை நான் அறிவேன். துக்கப்படும் நேரத்தை வேலை செய்வதில் செலவழித்தால், நன்மை பெறலாம்

என்பதையும் நான் அறிவேன். அதனால், எனக்கு நஷ்டம் ஏற்படும்போது நான் கவலைப்படுவது இல்லை,' என்று கூறினான்.

தம்பீ, இவ்விருவரில் அறிவாளி எவன்?

கேள்விகள்

1. சாமிநாதன் எப்படிப்பட்டவன்?
2. குப்புசாமி எப்படிப்பட்டவன்?
3. நீ இப்பாடத்தால் அறிவது யாது?

பயிற்சி

1. இக்கதையைக் குப்புசாமி சொல்வது போலச் சொல்.
2. இதனைச் சாமிநாதன் சொல்வது போலச் சொல்.
3. வெள்ளம், பாழ், நஷ்டம், அறுவடை, அறிவாளி—இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்துச் சொல்:
4. பொருத்தமான சொற்களைச் சேர்த்துப்படி:—

கண்ணன்	வந்தது
சீதை	எழுந்தன
நாய்	பாடினாள்
பசுக்கள்	ஆடினான்

5. செய்வதில், வியப்புடன், இழந்ததை, எனக்கு—பிரித்துக் கூறு.
6. அழல் + ஆனான், தான் + கு, யான் + கு, ஆறு + இல்—சேர்த்துப்படி.

25. வெண்காயப் பயிர்

காய்கறி	வாய்க்கால்	பிண்ணுக்கு	சிறந்த
வெண்காயம்	நாற்று	மூன்றரை	செழிப்பு
பிறப்பிடம்	நீர்பாய்ச்ச	அங்கிலேயில்	கறுத்து
ஆழமாக	இரம்	அரிந்து	சிறுத்து
தூளாக்க	கொத்தி	கிழங்கு	வாரத்திற்கு
பாத்தி	முத்துக்கோட்டை	உற்சாகம்	வளர்கையில்

1. நாம் உண்ணும் பல வகைக் காய்கறிகளுள் வெண்காயம் சிறந்த உணவுப் பொருளாகும். இதன் பிறப்பிடம் நமது நாடே ஆகும். ஆனல், இஃது இப்பொழுது உலகமெல்லாம் பயிரிடப்படுகிறது.

2. இதைப் பயிரிடும் நிலம் செழிப்புள்ளதாய் இருக்கவேண்டும். நிலத்தை ஆழமாக மடக்கி மடக்கி ஏழு எட்டு முறை உழ வேண்டும். பிறகு மண் கட்டி களை உடைத்துத் தூளாக்க வேண்டும். பின்னர், எட்டு அல்லது பத்து அடி நீளம் அகலம் உள்ள பாத்திகள் கட்டி, ஒவ்வொரு பாத்திக்கும் பக்கத்தில் தண்ணீர் பாய வாய்க்கால் கட்டவேண்டும்.

3. வெண்காயத்தைப் பயிரிடுவோர், நிலத்தில் வெண்காய விதைகளை மார்கழி மாதத்தில் விதைப்பர். அவை கடுகுபோலக் கறுத்துச் சிறுத்து இருக்கும். நாற்றுகள் வளர்ந்து பெரியவை ஆனபிறகு, தை மாதத்தில் பிடுங்கி, மேற்கூறிய பெரிய நிலத்தில் உள்ள பாத்திகளில் நடுவர். அவ்வாறு நடுகையில் ஆறு அங்குலத்துக்கு ஒன்று வீதம் நட வேண்டும்.

4. நாற்று நட்ட இரண்டு மூன்று வாரங்கள் வரையில் வாரத்திற்கு மூன்று முறையேனும் நீர் பாய்ச்ச வேண்டும். அதன் பிறகு வாரத்துக்கு இரண்டு முறை நீர் பாய்ச்ச வேண்டும். வெண்காயம் வளர்கையில் பாத்திகளில் ஈரம் எப்போதும் இருந்துகொண்டே இருக்கவேண்டும்.

5. வெண்காயப் பாத்திகளில் மூன்று நான்கு முறை களை எடுக்க வேண்டும்; பின்பு இலேசாக நிலத்தைக் கொத்திவிட வேண்டும். நாற்று நட்ட இரண்டு வாரங்களுக்குப் பிறகு சாம்பல் அல்லது முத்துக் கொட்டைப் பிண்ணுக்கைப் பாத்திகளின்மேல் தெளித்

தல் நல்லது. அப்படிச் செய்தால், வெண்காயம் பருத்து வளரும்.

6. நாற்று நட்ட மூன்றரை அல்லது நான்கு மாதங்களுக்குள் வெண்காயச் செடிகளின் மேல் இலைகள் பழுத்திருக்கும்; அடி இலைகள் உலர்ந்து வரும். அப்போது அடிக்கிழங்கும் முற்றி இருக்கும். அந்நிலையில், வெண்காய இலைகளை அரிந்துவிட்டுக் கிழங்குகளைக் களை வெட்டியால் தோண்டி எடுக்க வேண்டும். அவற்றை உலர்ந்த தரைமீது பரப்ப வேண்டும். இரண்டு மூன்று நாட்களில் கிழங்குகளில் உள்ள ஈரம் வற்றிவிடும். பின்பு கிழங்குகள் விற்கப் படும்.

7. வெண்காயம் அதிக சுவையுள்ள பொருள்; மூளையையும் உடம்பையும் பலப்படுத்தும்; பசியை உண்டாக்கி உற்சாகத்தைத் தரும்; நீரைச் சுத்தி செய்து ஒழுங்காகப் போகச் செய்யும்; உடம்பைக் குளிரச் செய்யும்.

கேள்விகள்

1. வெண்காயத்தைப் பயிரிடுமுன் வயலிற் செய்ய வேண்டும் வேலைகள் எவை?
2. எந்த மாதத்தில் எப்படி விதைக்க வேண்டும்?
3. விதைத்த பின் என்ன செய்ய வேண்டும்?
4. நாற்று நட்ட பிறகு என்ன செய்ய வேண்டும்?
5. அறுவடை செய்வது எப்படி?
6. வெண்காயம் எப்படிப்பட்டது?

பயிற்சி

1. பாய்ச்ச, நாற்றுநட, பிறப்பிடம், அங்கிலேயில் — இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்துச் சொல்.

2. பழுத்திருக்கும், பாத்திகளில், உற்சாகத்தை, ஆழமாக—பிரித்துக்காட்டு.

3. (1) இது நடு வீடு; நீ அதை நடு. (2) ஓட்டன் ஓடு மாற்றுகிறான்; நீ ஓடு. (3) இங்கு மேய்வது ஆடு; நீ அவனோடு ஆடு—தடித்த சொற்கள் என்ன சொற்கள்?

4. வித்தியாசம் என்ன?
கரி, கறி; பரி, பறி; இரங்கு, இறங்கு; இரந்தான், இறந்தான்.

5. எதிர்ப்பதம் கூறு:—ஏறு, இகழ், வலம், உஷ்ணம், தண்ணீர், கிழவன்.

6. ஆ = பசு, கோ = பசு, கை = ஓர் உறுப்பு, கோ = அரசன். இப்படி ஓர் எழுத்து ஒரு பொருளைக் குறித்தல் **சொல்** எனப்படும். இஃது ஓர் **எழுத்துச் சொல்** எனப்படும்.

கிளி—இது ஈரெழுத்துச் சொல்.

அறம்—இது மூவெழுத்துச் சொல்.

கட்டம்—இது நான்கு எழுத்துச் சொல்.

கட்டிடம்—இது ஐந்து எழுத்துச் சொல்.

இவ்வாறு பல எழுத்துகளைக் கொண்ட சொற்கள் உண்டு. இப்பாடத்தில் உள்ள 2, 3, 4 எழுத்துச் சொற்களைக் கூறு.

26. கண் நோய்

அவ்வப்போது	பிரகாசமாக	செய்கையால்	தெரிவித்தது
நாவால்	கேட்டான்	காரணம்	குளிப்பவன்
நோயின்றி	ஒன்றின்	சரியான	வராது
அடிக்கடி	பார்த்துவிட்டு	நக்கிக்கொண்டு	

1. கண்ணன் வாரத்துக்கு ஒரு முறை குளிப்பவன்; முகத்தை அவ்வப்போது சுத்தம் செய்யாதவன். ஒரு நாள் அவன் கண்கள் சிவந்து இருந்தன. இப்படி அடிக்கடி அவனுக்குக் கண் நோய் வருவதுண்டு.

2. ஒரு நாள் அவன் ஒரு நாயை வழியில் பார்த்தான். அப்போது அந்த நாய், தன் குட்டி ஒன்றின் முகத்தையும் உடம்பையும் தன் நாவால் நக்கிக்கொண்டு இருந்தது. கண்ணன் நாயைப் பார்த்து, 'நாயே, உன் குட்டிகளின் கண்கள் நன்ருக இருக்கின்றனவே! என் கண்களுக்கு மட்டும் அடிக்கடி நோய் வருகின்றதே! காரணம் என்ன?' என்று கேட்டான்.

3. நாய் அவனைப் பார்த்துவிட்டு மீண்டும் தன் குட்டியின் முகத்தை நக்கிக்கொண்டு இருந்தது. கண்ணன் நேராகப் பள்ளிக்கூடம் போனுன்; ஆசிரியரைக் கண்டான்; 'ஐயா, நாய்க்குட்டிகளின் கண்கள் நோயின்றிப் பிரகாசமாக இருக்க, என் கண்களுக்கு மட்டும் நோய் வரக் காரணம் என்ன?' என்று கேட்டான்.

4. ஆசிரியர், 'கண்ணா, காரணம் என்ன என அக்குட்டிகளின் தாயைக் கேட்டாயா?' என்றார். கண்ணன், 'கேட்டேன். அது என்னைப் பார்த்தது; மீண்டும் தன் குட்டியின் கண்களையும் முகத்தையும் நக்கிக்கொண்டே இருந்தது; பதில் ஒன்றும் சொல்ல வில்லை,' என்றான்.

5. ஆசிரியர், 'கண்ணா, அது உனக்குச் சரியான பதிலே சொன்னது. நீ அதைத் தெரிந்துகொள்ள வில்லை. அது தன் குட்டியின் முகத்தையும் கண்களை யும் நக்கிச் சுத்தமாக்கினது அல்லவா? அது அப்படி அவ்வப்போது செய்யும். அதனால் அக்குட்டிக்குக் கண் நோய் வருவதில்லை. இதைத்தான் அது உனக் குத் தனது செய்கையால் தெரிவித்தது. அதைப் போல நீயும் உன் கண்களை அவ்வப்போது தண்ணீர் விட்டுச் சுத்தமாகக் கழுவ வேண்டும். அப்படிச் செய்தால், உனக்குக் கண் நோய் வராது,' என்றார்.

கேள்விகள்

1. கண்ணன் எப்படிப்பட்டவன்?
2. நாய் என்ன செய்துகொண்டு இருந்தது?
3. கண்ணன் நாயை என்ன கேட்டான்? அது என்ன பதில் சொன்னது?
4. கண்ணன் ஆசிரியரிடம் என்ன கேட்டான்?
5. ஆசிரியர் அளித்த பதில் யாது?
6. நீ இந்நிகழ்ச்சியால் அறிவது யாது?

பயிற்சி

1. நாவால், நோயின்றி, நாயை, அவனுக்கு—பிரித்துக் காட்டு.
2. நக்கி + கொண்டு, நாய் + குட்டி, பிரகாசம் + ஆக, கண்கள் + கு—சேர்த்துப்படி.
3. நோயின்றி, பிரகாசமாக, சுத்தமாக, அவ்வப்போது—இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்துக் கூறு.
4. ஒரே வாக்கியமாகச் சேர்த்து எழுது:—(1) வீட்டில் பருப்பு இல்லை; வெல்லம் இல்லை; புளி இல்லை. (2) கற்பூரம் மளிகைக்கடையில் கிடைக்கும்; வேஷ்டி ஜவுளிக் கடையில் கிடைக்கும். (3) பாக்கு ஒரு வீசை கொடு; கற்கண்டு ஒரு சேர் கொடு; வெல்லம் அரை வீசை கொடு.
5. பிரித்து எழுது:—(1) நான் போன போது அவன் படித்துக்கொண்டிருந்தான். (2) நான் குளிக்கும் பொழுது அவள் துவைத்துக்கொண்டிருந்தாள்.
6. தடித்த சொற்கள் யாரைக் குறிப்பவை?
   (1) **அவன்** எங்கே? (2) **நீ** என்ன செய்கிறாய்? **நான்** வந்தேன், **அவர்** போகிறார், **அவள்** ஆடுகிறாள்.



27. கோழிக் குஞ்சு செய்த தவறு

நீந்திக்கொண்டு	இறங்கினல்	கேளாததால்
கோழிக்குஞ்சு	வீணுக	கெடுதி
வேண்டா	பயமுறுத்தி	கதி
தக்கபடி	தனக்குள்	வாழ்வாய்

1. ஒரு வாத்து, தண்ணீரில் நீந்திக்கொண்டு இருந்தது. ஒரு கோழிக் குஞ்சு அதைக் கண்டது. அது உடனே தன் தாயைப் பார்த்து, 'அம்மா, அதோ பார்: அந்த வாத்து, தண்ணீரில் நீந்துகிறது. நானும் அதைப்போல நீந்த விரும்புகிறேன்', என்றது.

2. கோழி, 'குழந்தாய், வேண்டா. உன்னுல் நீந்த முடியாது,' என்றது. குஞ்சு, 'வாத்து நீந்து கையில், நான் ஏன் அம்மா, நீந்தக்கூடாது? அது என்னைவிட உயர்ந்ததா? என்று தாயைக் கேட்டது.

3. தாய், 'நான் கூறுவதைக் கேள் : உன் கால் விரல்களைப் பார்; அவை தரையில் நடக்கத் தக்கபடி இருக்கின்றன. வாத்தின் கால் விரல்கள் தண்ணீரில் நீந்தத் தக்கபடி இருக்கின்றன. நீ நீரில் இறங்கினால் மூழ்கி இறந்துபோவாய்,' என்றது.

4. குஞ்சு தாயின் சொல்லைக் கேட்கவில்லை. அது நீரில் நீந்திக்கொண்டிருந்த வாத்தையே கவனித்துக் கொண்டு இருந்தது. 'எனக்கு நீந்தத் தெரியும்; என் தாய் வீணாக என்னைப் பயமுறுத்தினாள். அவள் மேய்ந்துகொண்டு இருக்கும்போது நான் குளத்தில் குதித்துவிடுவேன்,' என்று குஞ்சு தனக்குள் கூறிக் கொண்டது.

5. கோழி மேய்ந்துகொண்டு இருந்தது. அச் சமயம் பார்த்துக் குஞ்சு தண்ணீரில் இறங்கியது. அதற்கு நீந்தத் தெரியவில்லை. பாவம்! அப்போதுதான் அதற்கு நல்ல புத்தி வந்தது; 'என் தாய் வார்த்தையைக் கேளாததால் வந்த கேடுதி இது,' என்று நினைத்து வருந்தினது. பிறகு அக்குஞ்சு, பாவம்! நீரில் மூழ்கி இறந்தது.

6. குழந்தாய், தாயின் சொல்லைத் தட்டி நடந்த கோழிக் குஞ்சு அடைந்த கதியைப் பார்த்தாயா? நீ, தாய் சொற்படி நட; தந்தை வார்த்தையைக் கேள். நீ சுகமாக வாழ்வாய்.

கேள்விகள்

1. கோழிக்குஞ்சு விரும்பியது யாது?
2. தாய் தடுத்தது ஏன்?
3. குஞ்சு என்ன செய்தது? அதன் முடிவு யாது?
4. நீ இக்கதையால் அறிவது யாது?

பயிற்சி

1. இக்கதையை **மௌனமாகப்படி; சுருக்கி** எழுது.
2. இக்கதைக்குக் **குறிப்புகள்** தயார் செய்.
3. கோழிக் குஞ்சும் தாயும்—குஞ்சின் துணிச்சல்-நீதி: இக்குறிப்புகளைக் கொண்டு இக்கதையை மூன்று பாராவில் எழுது.
4. நீந்தி, வேண்டா, தக்கபடி, வீணாக, பயமுறுத்தி-இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்துச் சொல்.
5. இக்கதையைக் கோழி கூறுதல் போலக் கூறு.
6. இதனைக் குஞ்சு சொல்வது போலச் சொல்.
7. 'அவன் போனான். இராமன் வந்தான்'—என்று இவ்வாறு கருத்து முடிந்து நிற்கும் சொல் தொடருக்குப் பின், தொடர் முடிந்துவிட்டது என்பதைக் குறிக்க **முற்றுப்புள்ளி** இடவேண்டும். இங்ஙனம் முற்றுப் பெற்ற தொடர்கள் பல, ஒரே கருத்தைப் பற்றி ஒன்றனபின் ஒன்றாக வந்து சில வரிகளில் முடிவது **'பாரா'** எனப்படும்.

இப்பாடத்தில் எத்தனைப் பாராக்கள் இருக்கின்றன? ஒவ்வொரு பாராவிலும் எத்தனை வாக்கியங்கள் உள? எண்ணிச் சொல்.

28. நாய் கற்பித்த பாடம்

அறிவுடையது	புதியவர்	மீண்டும்
தூக்குக் கூடை	பழகியவர்	எறியும்படி
கௌவிக்கொண்டு	குழைத்து	தூண்டும்
காவல்காரனுக	உலவ	பலமுறை
பின் தொடர்ந்தது	மைதானம்	ஓடியாடி
மறுமுறையும்	புரியவில்லை	சொன்னபடி
கற்றுக்கொள்		

முருகன் மூன்ரும் வகுப்பு மாணவன். அவன் வீட்டில் நாய் ஒன்று இருந்தது. அது மிகுந்த அறிவுடையது. அது முருகன் தகப்பனுருடன் கடைக்குப் போகும்; தூக்குக் கூடையை வாயில் கௌவிக்கொண்டு வரும்.

அந்நாயே வீட்டுக்குக் காவல்காரனுக விளங்கியது; வீட்டுக்குப் புதியவர் வந்தால் குரைக்கும்; பழகியவர் வந்தால் வாலைக் குழைத்து ஆட்டும்; வீட்டுப் பிள்ளைகளோடு விளையாடும். அதற்கு முருகன்மீது அதிக ஆசை உண்டு.

ஒருநாள் மாலை முருகன் தன் தகப்பனுருடன் உலவச் சென்ருன். நாய் அவர்களைப் பின் தொடர்ந்தது. அவர்கள் ஒரு மைதானத்தில் உட்கார்ந்தார்கள். நாய் ஒரு கூழாங்கல்லைக் கௌவிக்கொண்டு வந்து முருகன் காலில் வைத்து நின்றது. அவனுக்கு ஒன்றும் புரியவில்லை.

உடனே தகப்பனுர், 'முருகா, அந்தக் கல்லை எடுத்து எறி; நாய் அதனை மீண்டும் கொண்டு வந்து உன்னிடம் கொடுக்கும்; மறுமுறையும் அதனை எறியும்படி உன்னைத் தூண்டும்' என்ருர்.

முருகன் தகப்பனுர் சொன்னபடி செய்தான். நாய் அக்கல்லே எடுத்து வந்து மறுபடியும் முருகன் முன் வைத்தது. இப்படிப் பலமுறை நாய் ஓடி விளேயாடியது. அதைக் கண்ட தந்தையார், 'முருகா, நீயும் இந்த நாயைப்போல ஓடியாடி விளேயாட வேண்டும். ஓட்டமும் ஆட்டமும் உடம்பிற்கு நல்லவை என்பதை இந்த நாயினிடமிருந்து கற்றுக்கொள்' என்ருர்.

கேள்விகள்

1. முருகன் வீட்டு நாய் எப்படிப்பட்டது ?
2. முருகனும் தகப்பனுரும் மாலேயில் எங்குச் சென்றனர் ?
3. நாய் கற்பித்த பாடம் யாது ? அது எவ்வாறு கற்பித்தது ?
4. நீ இக்கதையால் அறிவது யாது ?

பயிற்சி

1. இச்சம்பவத்தை நாயே கூறுவதுபோலக் கூறு.
2. இதனே முருகன் சொல்வது போலச் சொல்.
3. இதனே முருகன் தகப்பனுர் கூறுவது போலக் கூறு.
4. ஓடியாடி, எறியும்படி, பலமுறை, சொன்னபடி, பின் தொடர்ந்து—இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்துச் சொல்.
5. கோடிட்ட இடங்களில் தக்க சொற்களே அமைத்துப் படி.

   (1) முருகன்—சொன்னபடி—.
   (2) அவன்—நாய்—இருந்தது.
   (3) ஓட்டமும்—உடம்பிற்கு—.

29. கமலம் செய்த காரியம்—I

ஸ்ரீவாஞ்சியம்	பின்னல்	மேன்மை யடைய
பட்டணம்	சாமான்கள்	கற்பிக்க அழகாக
தேறினவள்	விளக்கி	ஒப்புக்கொண்டாள்
ஆச்சரியம்	மகிழ்ந்தனர்	போதித்து கூறியன
பாதுகாக்க	வேண்டிக்கோள்	

1. ஸ்ரீ வாஞ்சியம் என்பது ஒரு கிராமம். அந்தக் கிராமத்தில் ஒரு பள்ளிக்கூடம் இருந்தது. அதில் ஆண்பிள்ளைகளே படித்து வந்தார்கள். 'பெண் பிள்ளைகள் படிக்க வேண்டுவது இல்லை. பெண்களுக்குப் படிப்பு எதற்கு?' என்று அக்கிராமவாசிகள் கூறிக் கொண்டு இருந்தார்கள்.

2. ஒரு நாள் அக்கிராமத்துக்குப் பட்டணத்தில் இருந்து ஒரு பெண் வந்தாள். அவள் அக்கிராமப் பள்ளிக்கூட உபாத்தியாயரின் மகள். அவள் பெயர் கமலம். அவள் பத்தாம் வகுப்பில் படித்துத் தேறினவள். அவள் சுத்தமான உடைகளை உடுத்து இருந்தாள்; பார்ப்பதற்கு அழகாய் இருந்தாள்; தலையை ஒழுங்காகச் சீவி இருந்தாள்.

3. ஸ்ரீ வாஞ்சியத்துப் பெண்களைப் படிப்பிக்க வேண்டும் என்பது உபாத்தியாயர் எண்ணம். அதனால் அவர், தம் பள்ளிக்கூடத்தில் ஒரு கூட்டம் கூட்டினார்; அக்கூட்டத்தில் தம் மகள் பேசுவாள் என்பதைத் தெரிவித்தார். பெண் பேசப்போகிறாள் என்

பதை அறிந்த அக்கிராமப் பெண்கள் ஆச்சரியம் அடைந்தார்கள். எல்லாப் பெண்களும் பள்ளிக் கூடத்துக்கு வந்தார்கள். ஆடவர்களும் வந்திருந் தார்கள்.

4. எல்லோரும் வந்த உடன் கமலம் எழுந்தாள்; வெகு அழகாகப் பாடினுள்; தான் வைத்திருந்த பின்னல் சாமான்களைக் காட்டினுள்; 'பெண்கள் படித்தால் வீட்டையும் பொருள்களையும் சுத்தமாக வைத்துக் கொள்ள முடியும்; குழந்தைகளை நன்ருகப் பாதுகாக்க முடியும்,' என்னும் விஷயங்களை விளக்கிக் கூறினுள்.

5. கமலம் கூறியன யாவும் கேட்டு அக்கிராமத்து ஆடவர் மகிழ்ந்தனர்; 'கமலம் கூறியது நல்லதே. கமலத்தைப் போலவே நம் பெண்களும் படித்து மேன்மை அடைய வேண்டும்,' என்றனர். கிராமப் பெண்களும், 'நாம் கமலத்தைப் போலப் படித்த பெண்களாக மாற வேண்டும்,' என்று முடிவு செய்தனர். உடனே எல்லோரும், 'அம்மா கமலம், நீயே இவ்வூர்ப் பெண்களுக்குக் கல்வி கற்பிக்க வேண்டும்,' என்று வேண்டிக் கொண்டனர்.

6. கமலம், 'சரி' என்று ஒப்புக்கொண்டாள். மறுநாள் ஒரு பெரிய வீடு, பெண்கள் படிக்கும் பள்ளிக் கூடமாக மாறியது. அக்கிராமப் பெண்கள் ஒன்று சேர்ந்தார்கள். அன்று முதல் கமலம் அவர்களுக்குக் கல்வி போதித்து வந்தாள்.

கேள்விகள்

1. கமலம் யார்? அவள் தகப்பனர் யார்?
2. கமலம் என்ன பேசினுள்?
3. அவள் செய்த தொண்டு யாது?

பயிற்சி

1. பட்டணம், ஆச்சரியம், பின்னல், ஒப்புக்கொண்டு, கற்பிக்க—இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்துச் சொல்.
2. 4-ஆம் பிரிவில் உள்ள வினைச் சொற்களைச் சொல்.
3. 5-ஆம் பிரிவில் உள்ள பெயர்ச் சொற்களைச் சொல்.
4. 3-ஆம் பிரிவில் உள்ள ஒருமை, பன்மைகளைச் சொல்.
5. 5-ஆம் பிரிவில் உள்ள வாக்கியங்கள் எத்தனை?
6. இப்பாடத்தில் எத்தனை பிரிவுகள் உள்ளன?
7. ஒவ்வொரு பிரிவுக்கும் தலைப்புக் கொடு.
8. விஷயங்களை, பள்ளிக்கூடமாக, பார்ப்பதற்கு, பெண்களுக்கு.—பிரித்துக் காட்டு.
9. இதனை **மௌனமாகப்** படி; பிரிவுகளுக்குத் **தலைப்புக்** கொடு.
10. கமலம் + ஐ, கிராமம் + இல், அவர்கள் + கு, ஒழுங்கு + ஆக, வந்து + இருந்தார்கள்—சேர்த்துப் படி.

30. கமலம் செய்த காரியம் II

கற்பித்தாள்	கல்வியால்	கோலாட்டம்	தெருக்கள்
கேள்விப்படு	மாணவிகள்	சேவை	காணப்பட்டது
சுத்தமாக	ஆசைப்படு	தேறிய	வரவழைத்தாள்

1. கமலம் பெண்களுக்கு நன்ருகக் கல்வி கற்பித்தாள். எல்லாப் பெண்களும் எழுதப் படிக்கக் கற்றுக்கொண்டார்கள். அப்பெண்கள் தினந்தோறும் குளித்து வந்தார்கள்; சுத்தமான உடைகளை உடுத்து இருந்தார்கள்; தலை மயிரை ஒழுங்காகச் சீவியிருந்தார்கள். எல்லாப் பெண்களும் நன்ருய்ப் பாடக் கற்றுக் கொண்டார்கள்.

2. அவர்கள் தங்கள் வீடுகளைச் சுத்தமாக வைத்திருந்தார்கள். தெருக்கள் சுத்தமாய் இருந்தன. ஆ! கமலம் செய்த சேவையால் ஒரு வருடத்துக்குள் அக்கிராமப் பெண்கள் உயர்ந்த நிலையை அடைந்தார்கள். அக்கிராமம் மிகவும் சுத்தமாகக் காணப்பட்டது.

3. ஸ்ரீ வாஞ்சியம் கல்வியால் அடைந்த உயர்வைப் பற்றிப் பக்கத்துக் கிராமங்களில் இருந்த பெண்கள் கேள்விப்பட்டார்கள். அவர்கள் கமலத்தைப் பார்க்க ஆசைப்பட்டார்கள். கமலம் தன் மாணவிகளோடு பக்கத்துக் கிராமங்களுக்குச் சென்ருள். ஒவ்வொரு கிராமத்திலும் கமலம் தன் பெண்களைப் பாடச் செய்தாள்; கோலாட்டம் அடிக்கச் செய்தாள்.

4. கமலம், ஒவ்வொரு கிராமத்திலும் பெண்கள் படிப்பது எவ்வளவு நல்லது என்பதை விளக்கிப் பேசினுள். கமலத்தையும் அவள் மாணவிகளையும்

கண்ட பெண்கள் ஆச்சரியம் அடைந்தார்கள்; 'பெண்கள் படிப்பதால் குடும்பம் சுகமாக இருக்கும்' என்பதை உணர்ந்தார்கள். அவர்கள் தங்கள் கிராமத்தில் பெண்கள் பள்ளிக்கூடம் ஒன்றை ஏற்படுத்தும்படி கமலத்தை வேண்டினார்கள்.

5. கமலம் அதை ஒப்புக்கொண்டாள்; பட்டணத்தில் இருந்து தன்னோடு படித்துத் தேறிய ஐந்து பெண்களை வரவழைத்தாள்; ஒவ்வொரு கிராமத்திலும் பள்ளிக்கூடத்தை ஏற்படுத்தினாள். ஆ! பெண்கள் பள்ளிக்கூடம் ஏற்பட்ட அந்த ஐந்து கிராமங்களும் கல்விக்கு இடங்களாகக் காணப்பட்டன.

கேள்விகள்

1. பெண்கள் அடைந்த மாறுதல் என்ன?
2. கமலம் செய்த சேவையால் என்ன நன்மை உண்டானது?
3. அடுத்த கிராமங்களில் கமலம் செய்த சேவை யாது?
4. 'கல்விக்கு இடங்களாக' மாறின—எவை? எப்படி?
5. நீ இப்பாடத்தால் அறிவது யாது?

பயிற்சி

1. கோலாட்டம், கேள்விப்பட்டு, வரவழைத்தாள்—பிரித்துக் காட்டு.
2. தன் + ஓடு, விளக்கி + பேசு, ஆசை + படு, பாட + செய்தான் —சேர்த்துப் படி.
3. 4-ஆம் பாராவில் உள்ள வினைச் சொற்களைச் சொல்.

4. 3-ஆம் பாராவில் உள்ள பெயர்ச் சொற்களைக் கூறு.
5. முதல் பாராவில் உள்ள ஒருமை, பன்மைகளைக் கூறு.
6. 4-ஆம் பாராவில் உள்ள வாக்கியங்கள் எத்தனை?
7. ஒவ்வொரு பாராவிற்கும் தலைப்புக் கொடு.
8. இப்பாடத்தை மௌனமாகப் படி; சுருக்கி எழுது.

---

31. கடிதங்கள்

அவர்கட்கு	கடுமையான	காய்ச்சல்	அன்பு கூர்ந்து
பணிவுள்ள	ராஜவீதி	தஞ்சாவூர்	நகராண்மைக் கழகம்
வணக்கம்	ஆசீர்வாதம்	ஆண்டாள்	திருச்சிராப்பள்ளி
அன்புக்கு	தேர்வு	வெற்றி	அருள்

(1)

2. வள்ளுவன் தெரு,
தஞ்சாவூர், 15-12-40.

மூன்றும் வகுப்பு ஆசிரியர் அவர்கட்கு, வணக்கம்.

ஐயா,

நான் நேற்று மாலை முதல் கடுமையான காய்ச்சலால் வருந்திக்கொண்டு இருக்கிறேன். என்னால் படுக்கையை விட்டு எழமுடியவில்லை. ஆதலால், அன்பு கூர்ந்து எனக்கு இரண்டு நாட்கள் விடுமுறை கொடுக்க வேண்டுகிறேன்.

இங்ஙனம்:
தங்கள் பணிவுள்ள மாணவன்,
க. கண்ணன்.

மூன்றும் வகுப்பு ஆசிரியர் அவர்கட்கு,
நகராண்மைக் கழகப் பாடசாலை,
கீழ ராஜ வீதி, தஞ்சாவூர்.

(2) 3. தங்கசாலை வீதி,
சென்னை,
5 - 1 -' 41.

அன்புள்ள அப்பா அவர்கட்கு, வணக்கம்.

எங்கள் பள்ளிக்கூடம் திறந்து மூன்று நாட்கள் ஆயின. நான் சென்ற அரை வருடத் தேர்வில் முதல் வகுப்பில் தேறினேன் என்பதை அறிய, நீங்கள் மிக்க மகிழ்ச்சி அடைவீர்கள் அல்லவா? எனது வெற்றியை அம்மாவுக்கும் அண்ணனுக்கும் அன்புடன் தெரிவியுங்கள். நான் ஆண்டுத் தேர்விலும் இப்படியே முதல் வகுப்பில் தேற முயற்சி செய்வேன். கடவுள் அருளும் உங்கள் ஆசீர் வாதமுமே வேண்டுவன.

இங்ஙனம்:
தங்கள் அன்புக்குரிய மகன்,
மு. கோபாலன்.

திருவாளர்
க. முத்துரங்க முதலியார் அவர்கள்,
6, ஆண்டாள் தெரு,
திருச்சிராப்பள்ளி.

---

32. நீதி மன்றம்

ஏனங்குடி	**சோமசுந்தரம்**	**வேணு நாயகர்**	**கைச்சண்டை**
நன்னிலம்	**தாலூக்கா**	**ஆஜர்**	**வழக்குத் தொடுத்தார்**
சார்பாக	**நியாயவாதி**	**கட்சியார்**	**பிரதிவாதி**
விளைச்சல்	**பலவாம்**	**வாதி**	**மன்னிப்பு**

1. 'ஏனங்குடி' என்னும் கிராமத்தில் சோமசுந்தரம் பிள்ளை என்பவர் பெரியவர். அவர், எதிர்வீட்டு

வேணு நாயகருடன் வயலுக்குத் தண்ணீர் பாய்ச்சுவதைப்பற்றிச் சண்டையிட்டார். முதலில் வாய்ச் சண்டையாய் இருந்தது, முடிவில் கைச்சண்டையாய் மாறியது. வேணுநாயகர், கிராம அதிகாரி தம்மை அவமானப்படுத்திப் பேசியதாகவும் அடித்ததாகவும் நீதி மன்றத்தில் வழக்குத் கொடுத்தார்.

2. ஏனங்குடி, நன்னிலம் தாலூக்காவைச் சேர்ந்தது. அத்தாலூக்காவில் உள்ள நீதி மன்றத்தில் வழக்கு வந்தது. இரண்டு பேரும் குறித்த நாளில் நீதி மன்றத்தில் ஆஜர் ஆயினர். இருவர் சார்பாகவும் இரண்டு நியாயவாதிகள் வந்திருந்தார்கள்.

3. நீதிபதி வழக்கை எடுக்கக் கூடவில்லை. வழக்கைப் பத்து நாட்கள் கழித்தே எடுத்துக்கொள்வதாக நீதிபதி கூறினர். பத்து நாட்களுக்குப் பிறகு, குறித்த நாளில் இரு கட்சியாரும் நீதிமன்றத்தில் ஆஜர் ஆயினர். அன்று மாலை நான்கு மணிக்கு வழக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. வாதி வழக்கை எடுத்துக் கூறிக்கொண்டு இருக்கையில் மணி ஐந்து ஆயிற்று. அதனல் வழக்கு ஒரு மாதத்துக்குத் தள்ளி வைக்கப்பட்டது.

4. இதற்குள் வாதியின் நியாயவாதி முப்பது ரூபாய் வாதியிடம் பெற்றுக்கொண்டார். நீதிமன்றச் செலவு வேறு. பிரதிவாதியின் நியாயவாதி சோமசுந்தரம் பிள்ளையிடம் இருந்து இருபத்தைந்து ரூபாய் பெற்றுக்கொண்டார்.

5. சோமசுந்தரம் பிள்ளையும் வேணுநாயகரும் நீதிமன்றத்தை விட்டுத் தனித்தனி வண்டியில் ஏறிப் போயினர். வழியில் சோமசுந்தரம் பிள்ளை, ‘என்ன முட்டாள்தனம் செய்தேன்! முன் கோபத்தால் நாயகரை வாயில் வந்த விதம் பேசி அடித்தேன். இப்பொழுதோ, ஒரு நன்மையும் இல்லாமல் வழியிற் போகும் வக்கீல் இருபத்தைந்துரூபாய் வாங்கிவிட்டார். அந்தப் பணத்திற்கு நல்ல எரு வாங்கி வயலில் போட்டிருந்தால், விளைச்சல் அதிகமாய் இருக்குமே!’ என்று பலவாறு நினைத்துக்கொண்டு சென்றார். அவர் முடிவில் நாயகருடன் சமாதானமாகப் போவதெனத் தீர்மானித்தார்.

6. இப்படியே நாயகரும் பலபடியாக நினைத்து வருத்தப்பட்டுக்கொண்டே சென்றார். அச்சமயம் சோமசுந்தரம் பிள்ளை திடீரெனத் தம் வண்டியை விட்டு இறங்கி, ‘நாயகரே, நான் செய்த பிழையை மன்னிக்க வேண்டும். இனி நாம் நண்பர் ஆவோம். நீதிமன்றச் செலவு போதும்; நியாயவாதிகட்குத் தந்த பணமும் போதும். நீதிமன்றத்துக்குப் போவதைவிட நாமே ஒருவரிடம் ஒருவர் மன்னிப்புப் பெறுதல் நல்லது,’ என்று கூறினர்.

7. உடனே இருவரும் நண்பராயினர்; ஒரே வண்டியில் உட்கார்ந்து சந்தோஷமாகப் பேசிக்கொண்டு சென்றனர். அன்று முதல் அவர்கள் இருவரும் தங்கள் கிராமத்து வழக்குகளைத்தாங்களே தீர்த்துக் கிராமத்தில் சமாதானத்தை உண்டாக்கி வந்தார்கள்.

கேள்விகள்

1. வாதி—பிரதிவாதிகள் யார்? அவர்கள் எந்த ஊரினர்?
2. அவர்கட்குள் ஏன் சண்டை உண்டானது?
3. வழக்கு எங்கே நடந்தது?
4. இருவரும் சமாதானமாய்ப் போனதேன்?
5. பிறகு இருவரும் என்ன நன்மை செய்தனர்?
6. நீ இப்பாடத்தால் அறிந்த நீதி யாது?

பயிற்சி

1. இக் கதையை வேணுநாயகர் கூறுவது போலக் கூறு.
2. இதனையே சோமசுந்தரம் பிள்ளை கூறுவது போலக் கூறு.
3. இக்கதையையே கிராமத்தார் கூறுவது போலக் கூறு.
4. சண்டைக்குக் காரணம் - வழக்கு - உண்டான நஷ்டம் - அறிவு பெற்றது - சமாதானம் :—இக் குறிப்புகளைக் கொண்டு இக்கதையை 5 பாராக் களில் எழுது.
5. வாதி, பிரதிவாதி, நியாயவாதி, நீதிமன்றம், நீதி பதி—விளக்கு.
6. 5-ஆம் பாராவில் உள்ள வாக்கியங்கள் எத்தனை?
7. அதே பாராவில் உள்ள பெயர், வினைகளைச் சொல்.
8. முதல் பாராவில் உள்ள ஒருமை—பன்மைகளைச் சொல்.
9. நீதிமன்றம், நாயகர், ஏனங்குடி, நீதிபதி—இவற் றுள் பொருட் பெயர்கள் எவை? இடப் பெயர் கள் எவை?
10. வழக்கு, கிராமம், சமாதானம், செலவு-இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்துக் கூறு.

33. பொறுமைக் குணம்

சேரர்	சோழர்	பாண்டியர்	நெடுஞ்செழியன்
அரசாண்டு	பக்தி	சமர்த்தன்	தலையாலங்கானம்
சிற்றரசர்	அறுப்புண்டு	வீழ்ந்தார்கள்	பராக்கிரமம்
புலவர்	ஆதரித்து	பரவச்செய்	பொறுமை
போருக்கு	செத்தன	சிதற	தோற்கடி

1. நிலத்தில் நெல்லை விதைத்தால், நெல் விளையும். தினை விதைத்தால் தினை விளையும். இவ்வுண்மை உங்களுக்குத் தெரியும் அல்லவா? இதைப் போலவே நாம் நன்மை செய்தால், நன்மையைப் பெறுவோம்; தீமையைச் செய்தால், தீமையைப் பெறுவோம்.

2. தமிழ் நாட்டில் சேர நாடு, சோழ நாடு, பாண்டிய நாடு என்னும் மூன்று நாடுகள் இருந்தன. பாண்டிய நாட்டில் நெடுஞ்செழியன் என்ற மன்னன் அரசாண்டு வந்தான். அவன் நிரம்பப் படித்தவன்; தெய்வ பக்தி உடையவன்; போரில் வல்லவன்; குடிகளை ஆள்வதில் சமர்த்தன். அவன் தமிழ்ப் புலவர்களை ஆதரித்து வந்தான்.

3. தமிழ்ப் புலவர்கள் அவன் பெருமையைச் சோழ நாட்டிலும் சேர நாட்டிலும் பரவச் செய்தார்கள். அப்போது சேர சோழ நாடுகளை ஆண்டு வந்த அரசர்கள் பாண்டியன்மீது பொறாமை கொண்டார்கள். அவர் இருவரும் சிற்றரசர் ஐவரைச் சேர்த்துக் கொண்டு, பாண்டியன்மீது போருக்கு எழுந்தனர்; பாண்டியனைப் போரில் கொன்றுவிடத் தீர்மானித்தனர்.

4. இவ்வாறு தன்மீது ஏழு அரசர்கள் போருக்கு வருவதைப் பாண்டியன் அறிந்தான். அவன் சிறிதும் பயப்படவில்லை. பாண்டியன் தன் பெரிய சேனையோடு பகைவரை எதிர்த்தான். போர் கடுமையாக நடந்தது. பாண்டியன் ஏழு அரசர் சேனைகளையும் சிதற அடித்தான். யானைகள் இறந்தன; குதிரைகள் குதித்துச் செத்தன; வீரர்கள் தலையறுப்புண்டு வீழ்ந்தார்கள்.

5. பாண்டியன் செய்த சண்டையைப் பார்த்து ஏழு அரசரும் பயந்தனர். அவர்கள் முதுகு காட்டி ஓடத் தொடங்கினார்கள். அப்போது பாண்டியன் அவர்களை விடாமல் துரத்திச் சென்றான். பகைவர் எழுவரும் முன்னே ஓட, பாண்டியன் பின்னே ஓடி முடிவில், 'தலையாலங்கானம்' என்னும் இடத்தில் அவர்களைத் தோற்கடித்தான். பகைவர் திரும்பிப் பாராமல் ஓடிவிட்டனர். பாண்டியன் பராக்கிரமத்தைப் பார்த்தீர்களா! எழுவரும் பொறுமையால் அடைந்த பலனையும் கவனியுங்கள்.

கேள்விகள்

1. தமிழ் நாட்டில் இருந்த நாடுகள் எவை? அவற்றை ஆண்டவர் யார்?
2. நெடுஞ்செழியன் எப்படிப் பட்டவன்?
3. அவன்மீது பிறர் படை எடுத்த காரணம் யாது?
4. படையெடுத்தவர் யாவர்?

5. சண்டை எப்படி நடந்தது?
6. பாண்டியன் யாரை எங்கு வென்றான்? முடிவு யாது?
7. நீ இப் பாடத்தால் அறியும் படிப்பினை யாது?

பயிற்சி

1. கொன்றுவிட, பொறாமை, சேனையோடு, அறுப்புண்டு—இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்துப் படி.
2. நன்மை, வெற்றி, பலர், போர்—எதிர்ப் பதங்கள் கூறு.
3. அரசர்கள் பயந்தனர்; பதுங்கினர்; ஓடினர்—ஒரே வாக்கியமாக மாற்று.
4. அரசர்கள் ஓடினபோது பாண்டியன் விடாமல் துரத்தினான்.—இரண்டு வாக்கியங்கள் ஆக்கு.
5. 4-ஆம் பிரிவில் உள்ள பெயர்ச் சொல், வினைச் சொற்களைக் கூறு.
6. அதே பிரிவில் உள்ள ஒருமை, பன்மைகளைக் கூறு.
7. இதனை **மௌனமாகப்** படி; பிரிவுகளுக்குத் தலைப்புக் கொடு.
8. இக்கதையைச் சுருக்கி வரை.

34. சாரணச் சிறுவன்

இருப்பதை	மாணிக்கம்	தருணத்தில்	வந்தனம்
குளிக்க	சாரணச் சிறுவன்	வாயார	உபகாரி
சூழ்ந்து	திருவிழா	காப்பாற்றினேன்	புகழ்ந்தனர்
வேண்டுவது	தாமதித்தல்	வெகுமதி	அணைத்து

1. மாணிக்கம் ஒரு சாரணச் சிறுவன். சாரணச் சிறுவன் படத்தில் இருப்பதைப் போல உடுத்து இருப்பான். அவன் ஒரு நாள் தன் தாய் தந்தையரோடு திருவிழா பார்க்கச் சென்றான். அவர்கள் ஏறிச் சென்ற வண்டி ஒரு காட்டின் வழியே போய்க்கொண்டு இருந்தது. அக்காட்டின் பக்கத்தில் ஆறு ஒன்று ஓடிக் கொண்டு இருந்தது.

2. ஆற்றைக் கண்டதும் மாணிக்கத்தின் தகப்பனார் வண்டியை நிறுத்தினார். யாவரும் கீழே இறங்கி ஆற்றில் குளிக்கச் சென்றனர். அவர்களோடு வேறு சிலரும் ஆற்றில் குளித்துக்கொண்டு இருந்தனர்.

3. அப்போது திடீரென ஒரு பெண், 'ஆ! கோவிந்தன் ஆற்றில் விழுந்து விட்டான்! முழுகிவிடப் போகிறான்!' என்று கூவினாள். கோவிந்தன் தாயும் தந்தையும் 'ஓ' என்று அலறினார்கள்.

4. மாணிக்கம் கோவிந்தனைப் பார்த்தான். சிறிது தாமதித்தால் அவன் நீரில் முழுகிவிடுவான் போல இருந்தான். மாணிக்கம் உடனே ஆற்றில் குதித்தான்; முழுகும் தருணத்தில் இருந்த கோவிந்தனை அடைந்தான்; அவனை ஒரு கையால் அணைத்துக்கொண்டு, ஒரு கையால் நீந்திக் கரையை அடைந்தான்.

5. கரையில் இருந்த எல்லோரும் மாணிக்கத்தைச் சூழ்ந்துகொண்டனர்; அவனை வாயாரப் புகழ்ந்தனர். மாணிக்கம், 'நான் ஒரு சாரணச் சிறுவன். சாரணச் சிறுவன் பிறர்க்கு உதவி புரிய வேண்டும். அம்முறையில் நான் கோவிந்தனைக் காப்பாற்றினேன். இந்தச் சிறிய காரியத்துக்கு நீங்கள் என்னைப் புகழ வேண்டுவதில்லை,' என்றான்.

6. கோவிந்தன் தந்தையார், 'அப்பா, மாணிக்கம், உனக்கு என்ன வெகுமதி வேண்டும்? கேள், தருவேன்,' என்றார். மாணிக்கம் சிரித்துக்கொண்டே, 'ஐயா, சாரணச் சிறுவன் வெகுமதி பெறமாட்டான். உமது அன்புக்கு வந்தனம்,' என்றான்.

7. கோவிந்தன் தந்தையார், 'தம்பீ, சாரணச் சிறுவரால் ஜனங்களுக்கு அதிக நன்மை இருப்பதாகத் தெரிகிறது. நான், கோவிந்தன் பெரியவன் ஆனதும், அவனை ஒரு சாரணச் சிறுவனுக்குவேன். உன்னைப் போல அவனும் பிறர்க்கு உபகாரியாக இருக்கட்டும்,' என்றார்.

கேள்விகள்

1. சாரணச் சிறுவன் என்பவன் யாவன்?
2. அவன் வேலைகள் எவை?
3. மாணிக்கம் யாரோடு எங்குப் போனான்?
4. அவன் யாருக்கு என்ன உதவி செய்தான்?
5. கோவிந்தன் தந்தையார் என்ன சொன்னார்?
6. அதற்கு மாணிக்கம் சொன்ன பதில் யாது?

பயிற்சி

1. இந்நிகழ்ச்சியை நீ கண்டது போலக் கூறு.
2. இதனை மாணிக்கமே சொல்வது போலச் சொல்.
3. கோவிந்தன் கூறுவது போலக் கூறு.
4. சூழ்ந்துகொண்டு, தருணத்தில், திடீரென, வெகுமதி—இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்துக் கூறு.
5. வீழ்ந்தான், சிறிய, நன்மை, உபகாரம்—எதிர்ப் பதங்கள் கூறு.
6, 7-ஆம் பாராவில் உள்ள பெயர்ச் சொற்களையும் வினைச்சொற்களையும் சொல்.
7. 5-ஆம் பாராவில் உள்ள ஒருமை - பன்மைகளைச் சொல்.
8. நீ மாணிக்கத்தைப் பற்றி என்ன நினைக்கிறாய்? அதை எழுது.
9. ஆற்றை, ஆற்றில், காட்டின், காரியத்துக்கு, முறையில்.—இவற்றைப் பிரித்துக் காட்டு,

35. ஆகாய விமானங்கள்

ஏரோப்ளேன்	அவசரமாக	இயக்கப்பட்டு
ஜெப்ளின்	பயன்படு	உலோகம்
விமானங்கள்	பலூன்	தகடு
யுத்த காலம்	ஆராய்ச்சி	சுழலும்
பகைவர்	கடலிலும்	இழுக்கப்பட்டு
வெடி குண்டு	பெட்ரோல்	கிளம்பி
உபயோகப்பட்டு	எண்ணெய்	விமானத்துறை.
உருவத்தில்	தூரத்தில்	வானத்தில்

1. வானத்தில் பறக்கும் ஏரோப்ளேன், ஜெப்ளின் இவை ஆகாய விமானங்கள் எனப்படும். இவை யுத்த காலத்தில் பகைவரோடு சண்டையிடவும், பகைவர் இருக்கும் இடத்தை அறியவும், வானத்தில் இருந்துகொண்டு வெடி குண்டுகளைப் போடவும் உபயோகப்பட்டுவருகின்றன.



2. இவை, ஒரு நாட்டில் இருந்து அதிக தூரத்தில் உள்ள வேறொரு நாட்டுக்கு அவசரமாக மனிதர்கள் செல்வதற்கும் தபால்களை அனுப்புவதற்கும் பயன்படுகின்றன.

3. இவ்விமானங்களைக் கண்டுபிடிக்க முதலில் இருந்த மக்கள் மிகவும் கஷ்டப்பட்டார்கள். அவர்களில் ஒருவர், படத்தில் காட்டியுள்ளபடி பலூனைச் செய்தார்; இதன் அடியில் வைக்கோலைப் போட்டு எரித்தார். அப்போது கிளம்பிய புகையால் பலூன் வானத்திற் பறந்தது. இதுவே வானத்திற் பறந்த முதல் பலூன் ஆகும்.

4. இதன் பின்னர், பலர் பலவாறு ஆராய்ச்சி செய்தனர்; முடிவில் படத்தில் காட்டி உள்ளபடி ஒரு விமானத்தைச் செய்தனர். இதுவே ஏரோப்ளேன் என்பது. இதற்குப் பின்னரே ஜெப்ளின் செய்யப் பட்டது.



5. சில ஆகாய விமானங்கள் வானத்தில் பறப்ப தோடு கடலிலும் படகு போலச் செல்லத்தக்கவை. அவற்றுள் ஒன்றைப் படத்தில் பாருங்கள்.



6. ஆகாய விமானம் பெட்ரோல் என்னும் ஒரு வகை எண்ணெயின் சக்தியால் இயக்கப்பட்டுப் பறக் கின்றது. இஃது உருவத்தில் பறவையை ஒத்திருப்ப தால், வானத்தில் பறக்க முடிகிறது.

7. ஆகாய விமானம் உலோகத் தகடுகளால் ஆனது. அதன் முன் புறத்தில் விசிறி ஒன்று இருக்கிறது. விமானி (பைலட்) இயந்திரத்தை இயக்கியவுடனே, அந்த விசிறி வேகமாகச் சுழலும். அது சுழலும் வேகத்தினுல் ஆகாய விமானம் இழுக்கப்பட்டு,



மேலே கிளம்பிப் பறக்கும். அவ்வாறு கிளம்பிப் பறக்குமுன் விமானம் பூமியின்மீது உருண்டு செல்லச் சக்கரங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

8. பிரயாணிகளை ஏற்றிச் செல்லும் ஆகாய விமானத்தில் அழகான நாற்காலிகள் போடப்பட்டு இருக்கும். ஆகாய விமானங்கள் வந்து தங்குகின்ற இடம் விமானத்துறை எனப்படும்.

கேள்விகள்

1. பலூன் என்பது யாது? ஏரோப்ளேன் எது?
2. ஆகாயவிமானம் எதன் உதவியால் எப்படிப் பறக்கிறது?
3. அதன் உபயோகம் என்ன?

பயிற்சி

1. 7-ஆம் பிரிவில் உள்ள பெயர்ச் சொற்களைக் கூறு.

2. 8-ஆம் பிரிவில் உள்ள ஒருமை-பன்மைகளைக் கூறு.
3. 4-ஆம் பிரிவில் உள்ள வினைச் சொற்களைச் சொல்.
4. 3-ஆம் பிரிவில் உள்ள வாக்கியங்கள் எத்தனை?
5. அவன் போனான்—அவன் போய்—அவன் போன—முற்றுப் புள்ளி வைக்கத் தக்க இடத்தில் வை.
6. கிளம்பி, உலோகம், தகடு, ஆராய்ச்சி, அவசரமாக—இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்துச் சொல்.
7. அவசரமாக, ஒத்திருப்பது, அவர்களில் பகைவரோடு, இடத்தை—பிரித்துக் காட்டு.
8. விமானம் + துறை, உருவம் + இல், வர்ணம் + இல், சக்தி + ஆல், நாடு + கு.—இவற்றைச் சேர்த்து எழுது.

---

36. அறிவற்ற ஆமை

அன்னப் பறவை	ஆமை	நட்பாய்	குளக்கரை
கௌவிக்கொண்டு	சாக	செய்தி	செம்படவர்
ஜாக்கிரதை	அகற்ற	யோகம்	மூங்கிற்கொம்பு
நடுக்கம்	அமைத்து	வேறொரு	

1. ஒரு குளத்தில் ஆமை ஒன்று இருந்தது. அதே குளத்தில் இரண்டு அன்னப் பறவைகள் வசித்தன. ஆமை அந்த அன்னப் பறவைகளோடு நட்பாய் இருந்தது.

2. ஒரு நாள் இரண்டு செம்படவர்கள் அந்தக் குளக்கரைக்கு வந்தார்கள். அவர்கள், 'நாம் நாளை வந்து, இக்குளத்தில் இருக்கும் எல்லா மீன்களையும் ஆமைகளையும் பிடிக்க வேண்டும்,' என்று பேசிப் போனார்கள்.



3. அவர்கள் பேசிக்கொண்டு இருந்த செய்தியைக் கேட்ட ஆமை நடுக்கம் கொண்டது. அது அன்னப் பறவைகளிடம் நடந்ததைக் கூறித் தன்னை வேறொரு குளத்துக்கு அழைத்துச் செல்லும்படி வேண்டிக்கொண்டது.

4. 'ஆமையை எப்படி அழைத்துப் போவது?' என்று அன்னப் பறவைகள் யோசித்தன; பிறகு ஒரு மூங்கிற் கொம்பைக் கொண்டுவந்தன. அவை ஆமை

யைப் பார்த்து, ‘நண்பனே, நீ இக்கொம்பின் நடுப் பாகத்தைக் கௌவிக்கொள். நாங்கள் ஆளுக்கு ஒரு முனையைக் கௌவிக்கொண்டு, பறந்து போகிறோம். நீ வழியில் வாயைத் திறந்தால் விழுந்து சாகவேண்டும். ஆகையால், நீ மிகவும் ஜாக்கிரதையாய் இருக்க வேண்டும்,’ என்றன.

5. பின்னர், படத்தில் காட்டியுள்ளபடி அவை பறந்து போய்க்கொண்டு இருந்தன. அதைக் கண்ட சிலர் கை கொட்டி, ‘ஓ’ என்று கூவினர்; வேறு சிலர், ‘ஆமைக்கும் யோகம் வந்துவிட்டதே! அதுவும் மேலே பறக்கிறதே!’ என்று கூறிச் சிரித்தனர்.

6. ஆமை அவர்கள் கூறியதைக் கேட்டது. அதற்குக் கோபம் வந்துவிட்டது. அது என்னவோ சொல்வதற்கு வாயைத் திறந்தது. அவ்வளவுதான்: பாவம்! அது உடனே பூமியில் விழுந்து இறந்தது. பிள்ளைகளே, ஆமையின் அறிவு அற்ற செயலைப் பார்த்தீர்களா! நீங்கள் இதனால் தெரிந்து கொள்வது யாது?

கேள்விகள்

1. ஆமை அன்னப் பறவைகளை யாது வேண்டினது?
2. ஆமை எப்படிப் பறந்து போனது?
3. கண்டோர் கூறியது யாது?
4. ஆமை கீழே விழக் காரணம் யாது?
5. நீ இப்பாடத்தால் அறிவது யாது?

பயிற்சி

1. இப்பாடத்தை **மௌனமாகப்** படி; பாராக்களுக் குத் **தலைப்புக்** கொடு.
2. இக்கதையை அன்னப்பறவை கூறுவது போலக் கூறு.
3. இதனை ஆமை கூறுவது போலக் கூறு.
4. செம்படவர் பேச்சு, ஆமையின் யோசனை, பறத் தல், கோபத்தின் பலன்—இக் குறிப்புகளைக் கொண்டு, இக்கதையை 4 பாராக்களில் எழுது.
5. இறந்தது, விழுந்தது, சிரிப்பு, பிடித்தது—எதிர்ச்சொற்கள் கூறு.
6. பொருத்தமான சொற்களைச் சேர்த்துப்படி:—

நீங்கள்	சிரித்தார்கள்
பறவைகள்	பார்த்தீர்கள்
ஜனங்கள்	பறந்தன

7. 4-ஆம் பாராவில் உள்ள வினைச் சொற்களைக் கூறு.
8. அதே பாராவில் உள்ள ஒருமை, பன்மைகளைக் கூறு.
9. இப்பாடத்தில் உள்ள இடப்பெயர்களைச் சொல்.
10. நடுக்கம், அவசரம், கை கொட்டி, பாவம்—இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத் துச் சொல்.

---

37. நமது நாட்டு அரசாட்சி—I

(ஒரு சம்பாஷணை)

போகின்றவர்	அதிகாரி	அரசாங்கத்தார்	விதித்துள்ள
வரிவசூல்	இதுவன்றி	தீர்ப்பார்	சுகாதாரம்
நீர்ப்பாசனம்	கிராமாதிகாரி	கணக்கப்பிள்ளை	வெட்டியான்
தலையாரி	சேவகர்	தாசில்தார்	சம்பந்தமான
அதிகாரங்கள்	ஜில்லா	கலெக்டர்	சச்சரவு
ஆகின்றது	வசூலிப்பவர்		

கண்ணன்: அண்ணா, நம் அப்பாவுடன் போகின்றவர் யாவர் ?

அண்ணன்: தம்பி, அவரே நம் கிராம அதிகாரி.

கண்ணன் : நம் கிராம அதிகாரியா ? அவருக்கு என்ன வேலை ?

அண்ணன் : அவர் நமது கிராமத்தில் உள்ள நிலங்களுக்கு அரசாங்கத்தார் விதித்துள்ள வரியை வசூல் செய்வார் ; இதுவன்றிக் கிராமத்தில் ஏற்படும் சிறிய வழக்குகளைத் தீர்ப்பார் ; பொது நிலங்கள், அவற்றில் உள்ள மரங்கள், இவற்றைப் பாதுகாப்பார்; கிராமத்துக்கு வேண்டும் சுகாதாரம், நீர்ப்பாசனம் இவற்றைக் கவனிப்பார். இவரைப் போல ஒவ்வொரு கிராமத்துக்கும் ஒரு கிராமாதிகாரி இருப்பார். அவருக்குத் துணையாகக் கணக்கப் பிள்ளை ஒருவர் இருப்பார். அவர் நிலவரி கணக்குகளை எழுதுவார். மேலும், வெட்டியான், தலையாரி என இரண்டு சேவகர் இருப்பார்.

கண்ணன் : அண்ணா, இவருக்கு மேல் அதிகாரி யாவர் ?

அண்ணன் : பல கிராமங்கள் சேர்ந்தது ஒரு தாலூக்கா எனப்படும். அதன் அதிகாரி தாசில்தார் என்பவர். அவர் நமது தாலூக்காவின் நிலவரியை வசூலிப்பவர். அவருக்கு நிலத்தின் சம்பந்தமான சில அதிகாரங்கள் உண்டு.

கண்ணன் : பல கிராமங்கள் சேர்ந்தது ஒரு தாலூக்கா ஆகிறது. பல தாலூக்காக்கள் சேர்ந்த தொகுதிக்கு என்ன பெயர்? அதன் அதிகாரி யார்? அவர் வேலை என்ன?

அண்ணன் : தம்பி, பல தாலூக்காக்கள் சேர்ந்து ஒரு ஜில்லா ஆகின்றது. அதற்கு அதிகாரி கலெக்டர் என்பவர். அவர் நமது ஜில்லாவின் நில வரியை வசூலிப்பவர். அவர் நிலத்தின் சம்பந்தமான வழக்குகளையும், சண்டை சச்சரவுகளையும் விசாரணை செய்வார்.

கேள்விகள்

1. கிராம அதிகாரிகள் யாவர் ?
2. அவரவர் வேலை என்ன ?
3. கலெக்டர் வேலை என்ன ?
4. தாசில்தார் யார் ? அவர் வேலை என்ன ?
5. உன் கிராம அதிகாரியின் பெயர் யாது ?
6. அவரைப்பற்றி உனக்கு என்ன தெரியும் ?
7. அவருடைய கீழ் உத்தியோகஸ்தர் யார் ?

பயிற்சி

1. வரி வசூல், சம்பந்தமான, சண்டை, சச்சரவு, விசாரணை.—இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்துச் சொல்.
2. கிராம அதிகாரியாக உன்னை எண்ணிக்கொண்டு, கிராமாதிகாரியின் வேலையைக் கூறு.
3. அப்படியே தாசில்தார் வேலைகளைச் சொல்.
4. அப்படியே கலெக்டர் வேலைகளைச் சொல்.
5. வார்த்தைகளைப் பொருத்தமாகச் சேர்த்துப் படி :—

குதிரை	பொதி	சுமக்கும்
கழுதை	வண்டி	இழுக்கும்
நாய்	எலியைப்	பிடிக்கும்
பூனை	வீட்டைக்	காக்கும்

6. நீ கண்ட கிராமத்தைப்பற்றி 10 வரிகளில் சுருக்கி எழுது.
7. இப்பாடத்தில் வரைந்துள்ள இடப்பெயர்களைக் கூறு.
8. இதில் வரைந்துள்ள வினைமுற்றுகளை எழுது.
9. இதில் வந்துள்ள ஒருமை, பன்மைகளைச் சொல்.
10. இதில் வந்துள்ள பெயர்ச் சொற்களைக் கூறு.

38. நமது நாட்டு அரசாட்சி—II

விஷயம்	விவரமாக	மாகாணம்	கவர்னர்
ஆள்பவர்	சென்னை	சென்னைப்பட்டினம்	தலையிட
இந்தியநாடு	இராஜப்பிரதிநிதி	பதிலாய்	டில்லி
ஜார்ஜ்	இங்கிலாந்து	அரசாட்சி	அருமையான
சந்தர்ப்பம்	நம்புகிறேன்	புதியடெல்ஹி	நம்புகிறேன்

கண்ணன் : அண்ணு, விஷயம் நன்ருக இருக்கிறது. பல ஜில்லாக்கள் சேர்ந்த தொகுதிக்குப் பெயர் யாது? அதன் அதிகாரி யாவர்? அவர் வேலை யாது? எல்லாம் விவரமாகக் கூறுங்கள்.

அண்ணன் : கண்ணு, பல ஜில்லாக்கள் சேர்ந்த தொகுதி மாகாணம் எனப்படும். அதன் அதிகாரி கவர்னர் என்பவர். கவர்னர் என்ருல், ஆள்பவர் என்பது பொருள். நாம் இப்போது இருப்பது சென்னை மாகாணம். இதன் அதிகாரி சென்னைப்பட்டினத்தில் இருக்கிருர். இந்த மாகாணத்தைப்பற்றிய எல்லாக் காரியங்களிலும் தலையிடக் கவர்னருக்கு முழு அதிகாரம் உண்டு.

இத்தகைய பல மாகாணங்கள் சேர்ந்ததே நமது இந்திய நாடு. இந்நாட்டுக்குப் பெரிய அதிகாரியாய் இருப்பவர் இராஜப் பிரதிநிதி என்பவர். அவர் நம் அரசருக்குப் பதிலாய் இருந்து, நமது நாட்டை ஆள்பவர். அவர் புதிய டெல்ஹி என்னும் அழகான நகரில் இருக்கின்ருர்.

கண்ணன் : அண்ணு, நம் அரசர் இங்கு இல்லையா?

அண்ணன் : தம்பி, நம் அரசர் இந்தியாவில் இல்லை. அவர் தமது நாடாகிய இங்கிலாந்தில் இருக்கிறார். அவர் பெயர் ஆறும் ஜார்ஜ் என்பது. அவருக்கு இந்தியாவைப் போலப் பல நாடுகள் இருக்கின்றன. ஆதலால், அவர் இங்கிலாந்தில் இருந்துகொண்டு ஒவ்வொரு நாட்டையும் தம் பிரதிநிதிகளைக் கொண்டு அரசாட்சி செய்து வருகிறார்.

கண்ணன் : அண்ணா, நம் கிராம அதிகாரி இங்கு வந்ததால், இவ்வளவு அருமையான விஷயங்கள் எனக்குத் தெரிந்தன. இன்னும் எந்த அதிகாரியேனும் வந்தால், மேலும் பல விஷயங்கள் அறிந்து கொள்ளச் சந்தர்ப்பம் கிடைக்கும் என்று நம்புகிறேன்.

கேள்விகள்

1. மாகாணம் என்பது எது?
2. அதன் அதிகாரி யார்? அவர் வேலை என்ன?
3. இராஜப் பிரதிநிதி யார்? அவர் வேலை என்ன?
4. நமது அரசர் யார்? அவர் எங்கு இருக்கிறார்?

பயிற்சி

1. விவரமாக, ஆள்பவர், அரசாட்சி, அருமையான- இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்துப் படி.
2. இரண்டாம் பாராவில் உள்ள பெயர், வினைகளைச் சொல்.
3. நான்காம் பாராவில் உள்ள ஒருமை, பன்மைகளைச் சொல்.
4. கடைசிப் பாராவில் உள்ள வாக்கியங்கள் கூறு.
5. கவர்னர், இராஜப் பிரதிநிதி, அரசர்-இவர்களைப் பற்றிய விவரங்கள் கூறு.
6. கிராம அதிகாரிமுதல் அரசர் முடிய உள்ள அதிகாரிகளை முறைப்படி கூறு.



39. தெய்வத்தின்மீது பழியா!

(நாடகம்)

பழி	மாரியம்மன்	முறைப்படி	உடன்பிறந்தவர்
கோயில்	பலியிட	நியாயம்	உண்ணுகிறார்கள்
குலத்தவர்	வேண்டிக்கொள்	அற்றதாக	வாக்கு
கட்டப்பட்டு	அம்மனுக்கு	கண்மணி	தண்டியாமல்

ஆட்டுக் குட்டி: அம்மா, இந்தக் கோயில் தூண்களில் நம் குலத்தவர் கட்டப்பட்டு இருக்கின்றனரே, ஏன்?

தாய்: குழந்தாய், அவர்கள் இன்று இந்தக் கோயிலில் உள்ள மாரியம்மனுக்குப் பலியிடப்படுவார்கள்.

குட்டி: என்ன! பலியிடப்படுவார்களா? ஏன்?

தாய்: என் செல்வமே, மனிதன் நோயால் வருந்தும் போது அம்மனை நோக்கி, 'என் நோய் நீங்கினால், உனக்கு ஓர் ஆட்டைப் பலியிடுவேன்' என்று வேண்டிக்கொள்கிறான். அதன்படி அவன் நோய் தீர்ந்ததும் ஓர் ஆட்டை அம்மனுக்குப் பலி இடுவான். அந்த முறைப்படி இன்று பலர் இந்த ஆடுகளைப் பலியிடப் போகின்றனர்.

குட்டி: அம்மா, இது நியாயம் அற்றதாகத் தோன்றுகிறதே! மனிதன் நோய் நீங்குவதற்கும் ஆட்டுக்கும் என்ன சம்பந்தம்? மருந்து சாப்பிட்டால் நோய் நீங்குகிறது. அது எப்படியானாலும், இவர்கள் நம்மை ஏன் கொல்ல வேண்டும்?

தாய்: கண்மணி, தெய்வமே 'ஆட்டைப் பலியிடு' என்று கனவில் வந்து கூறுவதாகவும் சிலர் கூறுகின்றனர். அதனால், சில ஆடுகள் கொல்லப்படுகின்றன.

குட்டி: அம்மா, தெய்வம் ஆடு கேட்பது உண்டா? தெய்வந்தானே நம்மையும் மனிதரையும் படைத்தது. அதுவே தன் பிள்ளைகளைத் தனக்கே பலியிடும்படி, தன் பிள்ளைகளான மனிதர்களைக் கேட்குமா? அது என்ன, அறிவு இல்லாத தெய்வமா? இப்படியும் இருக்குமா? மனிதர்களே, 'தெய்வம் ஆடு கேட்கின்றது' எனத் தெய்வத்தின்மீது பழியைப் போட்டு, நம்மவரைக் கொன்று தின்கிறார்கள் என்றே நினைக்கிறேன்.

தாய்: ஆம், ஆம். நீ நினைப்பதே சரி. தெய்வம் ஆடு கேட்பதேது! மனிதர்கள், நாம் அவர்களின் உடன் பிறந்தவர்கள் என்பதை மறந்து, நம்மையே கொன்று உண்ணுகிறார்கள்.

குட்டி: அம்மா, இப்பாவச் செய்கையைத் தெய்வந்தான் எப்படிப் பார்த்துக்கொண்டு இருக்கிறது?

தாய்: குழந்தையே, 'அரசன் அன்று கொல்வான்; தெய்வம் நின்று கொல்லும்' என்பது பெரியோர் வாக்கு. இம்மனிதர்களைக் கடைசியில் தெய்வம் தண்டியாமல் விடாது! விடாது!!

கேள்விகள்

1. மனிதன் ஏன் ஆட்டைப் பலி யிடுகிறான்?
2. 'இது நியாயம் அற்றதாகத் தோன்றுகிறதே!'—எது? ஏன்?
3. 'தெய்வம் ஆடு கேட்பது உண்டா?' என்று தொடங்கிக் குட்டி என்ன சொன்னது?
4. அதற்குத் தாய் கூறிய பதில் யாது?
5. நீ இப்பாடத்தால் அறிவது யாது?

பயிற்சி

1. நியாயம், உண்டு, உள்ள, கனவு—எதிர்ப் பதங்கள் கூறு.
2. அற்றதாக, தண்டியாமல், வாக்கு, அம்மன்—இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்துக் கூறு.

3. வந்தான், செய்கிருள், ஓடுகிறது, வந்தன, பார்ப்பார்—இவற்றைக் கேள்வியாக மாற்று.
4. வந்தேன், போவேன், இருப்பார், எழுதுவாள்—'இல்லை' என்று பொருள் படும்படி ஒவ்வொன்றையும் மாற்று (வந்தேன் - வரவில்லை என்ருற் போல).
5. இராமன், அம்மணி, குமரன், கோவிந்தன்—இப் பெயர்களை அழைக்கும் பெயர்களாக மாற்று.
6. நீ பார்த்த திருவிழா ஒன்றைப் பற்றி 10 வரிகள் எழுது.
7. **குழந்தை**—இப்பெயர் அழைக்கப்படும்பொழுது **குழந்தாய்** என மாறும். இதைப்போன்ற **மூன்று** உதாரணங்களைச் சொல்.
8. இதில் வந்துள்ள இடப்பெயர்களைக் குறி.
9. இதில் வந்துள்ள பொருட் பெயர்களைக் குறி.
10. இதில் வந்துள்ள ஒருமை, பன்மைகளைக் கூறு.
11. இதில் உள்ள பெயர், வினைகளைக் கூறு.
12. இதை நாடகமாக நடித்துக் காட்டு.

40. செய்யுள் பாடம்

I. இடைச் சிறுவன்

1. இலவம்பட்டி என்றோர் ஊர்;
இருந்தான் அங்கோர் இடைச்சிறுவன்;
2. நல்லவன்; சிறிதும் பொய்பேசான்;
நலமாய் ஆடுகள் மேய்த்துவந்தான்;
3. ஓநாய் ஆட்டைத் திருடாமல்,
ஒழுங்காய்க் காவல் காத்துவந்தான்;
4. ஒருநாள் அரசர் அங்குவந்தார்;
"ஓ! ஓ! பையா! எனக்குதவு;
5. தாகத் தால்யான் தவிக்கின்றேன்;
தட்டா மல்நீர் கொணர்வாய்நீ."
6. என்றதைக் கேட்டான் இடைச்சிறுவன்;
கன்றினன்; 'ஐயா, கவனிப்பீர் :
7. இங்கே சிறிதும் நீர்இல்லை;
அங்கோர் குட்டை உளதென்றே'
8. ஓர்திசை காட்டிப் 'போம்' என்றான்.
பார்ஆள் வேந்தர் பகைத்தாரே.
9. 'தம்பீ! நீபோய் நீர்கொணர்வாய்;
எம்மால் இயலாதென் றுரைத்தார்.
10. 'ஐயா! ஆடுகள் உமக்கடங்கா:
மெய்யாய் ஓநாய் சூறையிடும்;
11. காவல் புரிவது என் கடமை
காவல் தவறின், கயவனுவேன்;

12. ஆதலால், போகேன்; மன்னிப்பீர்
ஐயா!' என்றவன் அறைந்தனனே.
13. 'பையா! அரசன் யான் என்றே
மெய்யாய் உணர்வாய், போ' என்றே
14. அரசர் கூறியும், அச்சிறுவன்
கரங்களைக் கொட்டி நகைத்தனனே.
15. 'அரசர் ஆனால் எனக்கென்ன?
ஆண்டிநீ ரானால் எனக்கென்ன?
16. கடமை ஒன்றே கவனிப்பேன் ;
கடவுள் கூறினும் கடவேன்யான்."
17. என்றவன் சொல்லக் கேட்டரசர்,
'என் இவன் அறிவு! ஆ! ஆ! ஆ!
18. சிறுவன் வயதில்; பெரியவனே
அறிவில்; கடமையிற் சிறந்தவனே'
19. என்றே தமக்குள் எண்ணிக்கொண்(டு)
ஏகினர் அரண்மனைக் கப்போதே;
20. மறுநாள் சிறுவனை வரவழைத்தார்;
மகனெனக் கொண்டே வளர்த்திட்டார்.

அரும்பதவுரை

கன்றினன்	=	மனம் வருந்தினன்
பார் ஆள்	=	பூமியை ஆளுகின்ற
வேந்தர்	=	அரசர்
இயலாது	=	முடியாது
கயவன்	=	கீழானவன்
கடவேன்	=	தவறமாட்டேன்
ஏகினர்	=	போனார்

II. ஆத்திசூடி

1. அறஞ் செய விரும்பு.
2. ஆறுவது சினம்.
3. இயல்வது கரவேல்.
4. ஈவது விலக்கேல்.
5. உடையது விளம்பேல்.
6. ஊக்கமது கைவிடேல்.
7. எண்எழுத்து இகழேல்.
8. ஏற்பது இகழ்ச்சி.
9. ஐயம் இட்டு உண்.
10. ஒதுவது ஒழியேல்.
11. ஔவியம் பேசேல்.
12. கண்டு ஒன்று சொல்லேல்.
13. ஞயம்பட உரை.
14. இணக்கம் அறிந்து இணங்கு.
15. தந்தைதாய்ப் பேண்.
16. நன்றி மறவேல்.
17. வஞ்சகம் பேசேல்.
18. இளமையிற் கல்.
19. காப்பது விரதம்.
20. குணமது கைவிடேல்.
21. கெடுப்பது ஒழி.
22. கேள்வி முயல்.
23. சான்றோர் இனத்துஇரு.
24. சுளிக்கச் சொல்லேல்.
25. சூது விரும்பேல்.
26. சேரிடம் அறிந்து சேர்.
27. செய்வன திருந்தச் செய்.
28. சோம்பித் திரியேல்.

29. துன்பத்துக்கு இடங்கொடேல்.
30. தெய்வம் இகழேல்.
31. நன்மை கடைப்பிடி.
32. நாடு ஒப்பன செய்.
33. நோய்க்கு இடம் கொடேல்.
34. பிழைபடச் சொல்லேல்.
35. பெரியாரைத் துணைக்கொள்.
36. பொருள்தனைப் போற்றிவாழ்.
37. மீதூண் விரும்பேல்.
38. மேன்மக்கள் சொற்கேள்.
39. மொழிவது அறமொழி.
40. வித்தை விரும்பு.
41. உத்தமனாய் இரு.
42. வெட்டெனப் பேசேல்.
43. வைகறைத் துயில் எழு.
44. ஓரம் சொல்லேல்.
45. மூர்க்கரோடு இணங்கேல்.

III. கொன்றை வேந்தன்

(சுருக்கம்)

1. அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்.
2. ஆலயம் தொழுவது சாலவும் நன்று.
3. இல்லறம் அல்லது நல்லறம் அன்று.
4. ஈயார் தேட்டைத் தீயார் கொள்வர்.
5. ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும்.
6. எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்.

7. ஏவா மக்கள் மூவா மருந்து.
8. ஐயம் புகினும் செய்வன செய்.
9. ஔவியம் பேசுதல் ஆக்கத்திற்கு அழிவு.
10. கிட்டா தாயின் வெட்டென மற.
11. கீழோர் ஆயினும் தாழ உரை.
12. கைப்பொருள் தன்னின் மெய்ப்பொருள் கல்வி.
13. சான்றோர் என்கை ஈன்றோர்க் கழகு.
14. சூதும் வாதும் வேதனை செய்யும்.
15. தந்தைசொல் மிக்க மந்திரம் இல்லை.
16. தாய்சொல் துறந்தால் வாசகம் இல்லை.
17. திரைகடல் ஓடியும் திரவியம் தேடு.
18. தேடாது அழிக்கின் பாடாய் முடியும்.
19. நுண்ணிய கருமமும் எண்ணித் துணி.
20. நூல்முறை தெரிந்து சீலத்து ஒழுகு.
21. மாரி அல்லது காரியம் இல்லை.
22. மீகாமன் இல்லா மரக்கலம் ஓடாது.
23. முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்.
24. மூத்தோர் சொல்லும் வார்த்தை அமிர்தம்.
25. வீரன் கேண்மை கூர் அம் பாகும்.
26. குற்றம் பார்க்கில் சுற்றம் இல்லை.
27. பாலோடு ஆயினும் காலம் அறிந்துண்.
28. வையந் தோறும் தெய்வம் தொழு.

அ	ஆ	இ	ஈ	உ	ஊ	எ
க	கா	கி	கீ	கு	கூ	கெ
ங	ஙா	ஙி	ஙீ	ஙு	ஙூ	ஙெ
ச	சா	சி	சீ	சு	சூ	செ
ஞ	ஞா	ஞி	ஞீ	ஞு	ஞூ	ஞெ
ட	டா	டி	டீ	டு	டூ	டெ
ண	ணா	ணி	ணீ	ணு	ணூ	ணெ
த	தா	தி	தீ	து	தூ	தெ
ந	நா	நி	நீ	நு	நூ	நெ
ப	பா	பி	பீ	பு	பூ	பெ
ம	மா	மி	மீ	மு	மூ	மெ
ய	யா	யி	யீ	யு	யூ	யெ
ர	ரா	ரி	ரீ	ரு	ரூ	ரெ
ல	லா	லி	லீ	லு	லூ	லெ
வ	வா	வி	வீ	வு	வூ	வெ
ழ	ழா	ழி	ழீ	ழு	ழூ	ழெ
ள	ளா	ளி	ளீ	ளு	ளூ	ளெ
ற	றா	றி	றீ	று	றூ	றெ
ன	னா	னி	னீ	னு	னூ	னெ

ஏ	ஐ	ஒ	ஓ	ஔ	ஃ
கே	கை	கொ	கோ	கௌ	க்
ஙே	ஙை	ஙொ	ஙோ	ஙௌ	ங்
சே	சை	சொ	சோ	சௌ	ச்
ஞே	ஞை	ஞொ	ஞோ	ஞௌ	ஞ்
டே	டை	டொ	டோ	டௌ	ட்
ணே	ணை	ணொ	ணோ	ணௌ	ண்
தே	தை	தொ	தோ	தௌ	த்
நே	நை	நொ	நோ	நௌ	ந்
பே	பை	பொ	போ	பௌ	ப்
மே	மை	மொ	மோ	மௌ	ம்
யே	யை	யொ	யோ	யௌ	ய்
ரே	ரை	ரொ	ரோ	ரௌ	ர்
லே	லை	லொ	லோ	லௌ	ல்
வே	வை	வொ	வோ	வௌ	வ்
ழே	ழை	ழொ	ழோ	ழௌ	ழ்
ளே	ளை	ளொ	ளோ	ளௌ	ள்
றே	றை	றொ	றோ	றௌ	ற்
னே	னை	னொ	னோ	னௌ	ன்

Printed at the B. N. Press, Mount Road, Madras.